# அறிவுக் களஞ்சியம்

35



அடுத்த
ஆண்டு
இவருக்கு
நூறாவது வயது
நிறைவு விழா!

3 ஆம் பக்கம் பார்க்க

வரதர் வெளியீடு ரூபா 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும், யாழ் நகரில் —

# ஆர். ஜி. ஸ்ரோர்ஸ்

# R. G. STORES

56, A. மணிக்கூட்டு வீதி,

யாழ்ப்பாணம்.

* அழகு சாதனப் பொருட்கள்
* பாடசாலை உபகரணங்கள்
* ஃபிலிம் றோல் முதலிய

போட்டோ கலைஞர்களுக்குத்
தேவையான பொருட்கள்

தரமானவை! நியாயமான விலை!

கிளை:
இல. 54, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வணக்கம்

அறிவுக் களஞ்சியம் அன்பர்களோடு, ஒரு நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும் சந்திக்க முடிந்திருப்பது குறித்துப் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளுக்கு முன் அறிவுக் களஞ்சியத்தின் 34 ஆவது இதழ் வெளி வந்தது. 35 ஆவது இதழ் அச்சு வேலை நடந்து கொண்டிருந்த வேளையில் - 1995 ஒக்டோபர் கடைசியில் எமது ஊரை விட்டு இடம் பெயர நேரிட்டது.

அப்போது, ஊரோட நாமும் ஒத்தோடினோம்.

திரும்ப வந்தோம். வாழ்க்கை நடக்கிறது. ஆயினும் பழைய மகிழ்ச்சியும், மன நிம்மதியும், செழிப்பும் இன்னும் எம்மிடம் வந்து சேர வில்லை.

ஆயினும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மின்சாரம், தொலைபேசி, போக்குவரத்து எல்லாமே அடையாள அணி வகுப்பாக வந்து கொண்டிருக்கின்றன.

'எல்லாம் நிறைவாக வரட்டும்' என்று பார்த்துக் கொண்டிருப்பதால் பயனில்லை.

'அறிவுக் களஞ்சியத்தை வெளியிடவில்லையா?' என்று பல அன்பர்களும் விசாரிக்கத் தொடங்கி விட்டார்கள்.

எனவே,

கிடைத்த வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு அறிவுக் களஞ்சியம் உங்கள் கைகளுக்கு வந்து விட்டது!

அன்பர்களும் அறிஞர்களும் கைகொடுக்க முன்வந்திருக்கிறார்கள்.

அன்பர்கள் எல்லாருடைய ஒத்துழைப்புடனும் அறிவுக் களஞ்சியம் இனித் தொடரும்.

ஆதரவு செய்யுங்கள். அறிவுரைகள் கூறுங்கள்.

அன்புடன்

— வரதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக் களஞ்சியம் - 35

அறிவியல் தொடர் வெளியீடு

மேலாளர் :- வரதர்

இணை ஆசிரியர்கள் :- ச. பாலசுந்தரம், பீ. ஏ. (சிறப்பு)
ந. சிவபாதம், ஜே. பி. (புத்தொலி)

உதவி ஆசிரியர் :- செல்வி, வை. சுகன்யா

முகாமையாளர் :- அ. க. சண்முகதாசன்

முகவரி :- 226, காங்கேசன்துறைச்சாலை, யாழ்ப்பாணம்.

தொலைபேசி :- 2820

அரண் செய்வோர்;

❋ வித்துவான், க.சொக்கலிங்கம், எம். ஏ (சொக்கன்)
❋ சி. சிவசரவணபவன், எம். ஏ. (சிற்பி).
❋ சு. குமாரசாமி, பி. எஸ்ஸி, (சாமிஜி).
❋ கலாநிதி க. குணராசா, (செங்கை ஆழியான்).


## நீங்களும் எழுதலாம் !

அறிவுக் களஞ்சியத்துக்கு நீங்களும் எழுதலாம். அறிவியல் தொடர்பான சுவையான விடயங்களைச் சுருக்கமாக—ஒரு பக்கத்துள் வரக் கூடியதாக எழுதுங்கள். (ஒரு எச்சரிக்கை! வேறு பத்திரிகைகளிலோ, புத்தகங்களிலோ வந்த விடயங்களை அப்படியே 'கொப்பியடித்து' எழுதக் கூடாது).

உங்கள் கட்டுரை ஏற்றுப் பிரசுரிக்கப் பட்டால் அதற்குச் சன்மானமும் கிடைக்கும்.

### வினாவும் விடையும்

வரவிருக்கும் வினாவிடைப் பகுதிக்கு நல்ல வினாக்களை நீங்கள் எழுதி அனுப்பலாம். நான்கு வினாக்கள் மட்டும் தெரிவு செய்யப்பட்டு அவற்றுக்கு விளக்கமான பதில்கள் தரப்படும். அந்த வினாக்களைக் கேட்ட நால்வருக்கும் ரூபா 20/— வீதம் பரிசு கிடைக்கும்.

### வாசகர் குரல்

அடுத்த இதழிலிருந்து 'வாசகர்' குரல் பகுதி வெளிவரும். அறிவுக் களஞ்சியம் பற்றிய உங்கள் கருத்துக்களை மிகச் சுருக்கமாக எழுதி அனுப்பினால் அவை உங்கள் பெயருடன் பிரசுரமாகும்

— ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பண்டித மணி'

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் தமிழ்ப் பண்டிதர்கள் பெருந் தொகை. இவர்களில் பலர் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பண்டிதர்கள். சிலர் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர்கள்.

திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலையில் தமிழ்ப் பேராசிரியராக இருந்த சி. கணபதிப்பிள்ளை அவர்களும் ஒரு மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர்தான்.

பண்டிதப் பரீட்சை எடுத்துச் சித்தியடைந்தவர்கள் எல்லோரும் பண்டிதர்களே.

ஆனால், இந்த சி. கணபதிப்பிள்ளை என்ற பண்டிதர் சற்றே வித்தியாசமான பண்டிதர்.

பல பண்டிதர்களை உற்பத்தி செய்த பண்டிதர்.

அதனால் அவரை வித்தியாசப் படுத்தி, உயர்த்திக் காட்டுதற்காக ஒரு முறை தினகரன் பத்திரிகை அவரைப் 'பண்டிதமணி' என்று குறிப்பிட்டது.

தமிழ் மக்கள் அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள் 'பண்டிதமணி' என்பது ஏதோ ஒரு உயர் கல்விப் பீடப் பட்டம் போல கணபதிப்பிள்ளை அவர்களோடு ஒட்டிக்கொண்டது.

யாரும் அதற்கு அட்டி இல்லை.

வேறு எந்தப் பண்டிதரும் தம்மைப் 'பண்டிதமணி' என்று குறிப்பிடக் கூச்சப் பட்டார்கள்.

அது இமயமலை!

பேராதனைப் பல்கலைக் கழகத்தார் பண்டிதமணிக்கு, 'இலக்கிய கலாநிதி' என்ற பட்டத்தை அளித்துத் தங்களைக் கௌரவம் செய்து கொண்டார்கள்.

ஆனால், இந்தப் பட்டத்தையும் விஞ்சி, 'பண்டிதமணி' என்ற பட்டமே கணபதிப்பிள்ளை அவர்களோடு ஒன்று கலந்து விட்டது:

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் தமிழ் இலக்கியத்தைக் கசடறக் கற்றவர். பழத்தைப் பிழிந்து அதன் ரசத்தை எடுப்பது போல, இலக்கியத்திலிருந்து அதன் நயத்தை எடுத்துக் காட்டுவதில் மகாவிண்ணர்!

39 ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசு ரூபா 200/-

# பொது அறிவுப் போட்டி

## வினாக்கள்

1) இந்த யூலை மாதக் கடைசியில் சார்க் அமைப்பின் மாநா கொழும்பில் நடைபெறவுள்ளது. சார்க் அமைப்பின் உறுப்பு நாடுகள் எவை?

2) இந்தியாவும் பாகிஸ்தானும் சமீபத்தில் அணுக்குண்டுப் பரிசோத னைகளை நடத்தின. அதற்கு முன்னரே அணுச்சக்தி வல்லரசுகள் என்ற பெயரோடு விளங்கும் ஐந்து நாடுகளும் எவை?

3) இலங்கையின் நீதி அமைச்சர் யார்?

4) கம்பனைப்போல், வள்ளுவன்போல், இளங்கோவைப்போல் சிறந்த புலவர்களை உலகெங்கும் காணவில்லை என்று பாரதியார் பாடியி ருக்கிறார். இந்த மூன்று புலவர்களுக்கும் புகழ் சேர்த்த நூல்கள் எவை?

5) சூரியன், காரியதரிசி, ஆஸ்பத்திரி, சந்தோசம், சுகம் ஆகிய பிற மொழிச் சொற்களுக்குச் சரியான தூய தமிழ்ச் சொற்கள் எவை?

6) சிங்கள மன்னனான விஜயன் இலங்கைக்கு வர முன்னரே, இலங்கை யில் வாழ்ந்த திராவிட இனத்தவர் யாவர்?

7) ஆபிரகாம் லிங்கன் ஒரு கறுப்பு இனத்தவர்! அமெரிக்க ஜனா திபதி! கிறிஸ்தவ மத போதகர்! புகழ் பெற்ற விஞ்ஞானி. இவற்றில் சரியானதை மட்டும் எழுதுக.

8) எயிட்ஸ் என்பது மிகப் பயங்கரமான ஆட்கொல்லி நோய். இந்த நோய் வருவதற்கு முக்கியமான காரணம் எது?

9) பின்வரும் இலக்கங்கள் ஒருவித ஒழுங்கு முறையில் அமைந்துள்ளன. அந்த ஒழுங்கு முறையின் படி கடைசியாக வர வேண்டிய இலக் கத்தைக் குறிப்பிடுக?

**21, 12, 65, 56, 43, 34, 11, .........?**

10) இவ்வுலகில் முதன்முதலாக அணுக்குண்டைப் போட்டவர்கள் எந்த நாட்டினர்? எந்த நாட்டின் மீது போட்டார்கள்?

( விபரங்கள் : 39 ஆம் பக்கம் பார்க்க )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமரப்பருவம்

* * * * * *

இப் பருவத்திற்குரிய வயது 13 லிருந்து 20 வரை என்று பொதுவாகச் சொல்லலாம். இந்த ஏழாண்டுகளும் ஒருவனுடைய வாழ்க்கையில் மிக முக்கியமான காலமாகும். எதிர் காலத்தில் ஒருவன் எவ்விதமாக மாறிப் பெரிய மனிதனாக விளங்கப் போகிறானென்பதை இப்பருவகாலமே தீர்மானிக்கிறதெனலாம்.

ஒருவனுடைய உள்ளமும் உடலும் இப்பருவ காலத்திலேயே செம்மையுறுகின்றன. ஒருவனுடைய முழு வளர்ச்சிக் காலத்தில் அவன் அடையக் கூடிய உயர வளர்ச்சியில் பத்தில் ஒன்பது வீதத்தையும், நிறையில் மூன்றில் இரண்டு பகுதியையும் அவன் தனது பதினாறாவது வயதிலேயே பெற்று விடுகிறானென்பது குறிப்பிடத்தக்கது.

வெளித் தோற்றத்தில் -ஆடை அணிகள் அலங்காரங்கள் செய்து கொள்வதிலும் இப்பருவத்தினரே மிகுந்த கவனம் செலுத்துவது இயல்பு.

சிந்தித்தல், செயற்படுதல், கவனித்தல், கற்பனை செய்தல், நினைவு கூரல் முதலிய மனத்திறன்கள் இளமைப் பருவத்திலேயே தோன்றியிருந்தாலும் குமரப் பருவத்திலேதான் அவை வலிமை பெற்றுத் தொழிற்படுகின்றன.

ஆண் - பெண் பாலுணர்வும் இப் பருவத்திலேயே தீவிரமாக ஏற்படுகிறது - இது தவறான ஒன்றல்ல இயற்கையானதே.

சிறந்த எழுத்தாளர்களும், கலைஞர்களும், அறிவியலாளர்களும் விளையாட்டு வீரர்களும், தொழில் வல்லுனர்களும் இந்தப் பருவத்திலேயே உருவாகத் தொடங்குகிறார்கள்.

குமரப் பருவம் ஒருவனது வாழ்வில் மிக முக்கியமானது. இந்தப் பருவத்தில் சரியான வழி நடக்க வழி கிடைத்தவர்கள், - வழி நடத்தப் பட்டவர்கள் பிற்காலத்தில் மதிப்போடும் புகழோடும் வாழ்கிறார்கள். O

---

## வித்தியாசமான சிங்கப்பூர்

இலங்கை, இந்தியா போன்ற பல நாடுகள், குழந்தைகளின் பிறப்பு விகிதத்தைக் குறைப்பதற்குப் படாத பாடுபடுகின்றன. ஆனால், ஆசியாக் கண்டத்திலேயே சிங்கப்பூர் மட்டுந்தான் அதிகமாகக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு மக்களை தூண்டுகிறது. பொருளாதார வளம் அங்கே நிறைய உண்டு. ஆனால் குழந்தைகள் பிறப்பு விகிதமோ மிகவும் குறைவு !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டன்பேர்க் Gutenberg (1400 - 1468)

ஜெர்மனியிலுள்ள மயின்ட்ஸ் (Mainz) என்னும் இடத்தில் பிறந்தவர் கூட்டன் பர்க். ஐரோப்பாவில் அச்சடிக்கும் முறையைக் கண்டு பிடித்த இவர் ஒரு முறை அரசியல் நிகழ்ச்சிகளின் காரணமாக 1420 ல் தனது தாயுடன் மயின்ட்ஸை விட்டு ஓடினார்.

இவருடைய சொத்து முழுவதையும் எதிரிகள் கைப்பற்றிக் கொண்டதால் பணம் எதுவும் இன்றி பல நாடுகளில் அலைந்து திரிந்த இவர், தன் கடின முயற்சியால் 1439 ம் ஆண்டு ஜெர்மனியிலுள்ள 'ஸ்டிராஸ்பர்கில்' (Strasbourg) அச்சிடும் முறையைக் கண்டு பிடிக்க முயன்றார்.

சிறிய மரத்துண்டுகளை சேகரித்த கூட்டன் பேர்க் அவற்றில் எழுத்துக்களைத் தலைகீழாக இருக்குமாறு கத்தியால் செதுக்கினார். பின்னர் அக் கட்டைகளில் துளையிட்டு கோத்து கரு நிற மையில் மூழ்க வைத்து எடுத்து மெல்லிய சாக்கில் அழுத்தி அச்சிட்டார். இதுவே அச்சுத் தொழிலின் ஆரம்பப் படியாகக் கருதப்படுகிறது.

1448 ல் தமது சொந்த ஊர் திரும்பிய கூட்டன் பேர்க் ஜோகன் பஸ்ட் என்பவருடன் இணைந்து அவரது பொருளுதவியால் தன் அச்சு இயந்திரத்தை விரிவுபடுத்தினார்.

'மாசரின் பைபிள்' என்ற நூலை அந்த இயந்திரத்தில் முதன் முதலாக அச்சேற்றி வெளியிட்டார்.

இன்று மூலை முடுக்கெல்லாம் இன்றியமையாதது ஒன்றாகவே அச்சு இயந்திரம் ஆகிவிட்டதென்றால், கூட்டன் பேர்க்கின் அயராத முயற்சி தான் முதற் காரணம்!

'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக கூட்டன் பேர்க் விளங்குகிறார்.

---

## "புகா, புகா"

அரசன் ஒருவன் மொழிகளில் இயற்கையான மொழி எது என்று அறியும் நோக்குடன், பேசிப் பழகாத பராயமுள்ள குழந்தைகள் சிலவற்றை தனியே ஒரு வீட்டில் வைத்து, உணவு கொடுத்துப் பராமரித்து வந்தான். அக் குழந்தைகள் பிறருடன் பேசிப் பழகும் வாய்ப்புத் தவிர்க்கப்பட்டது. சில காலத்தின் பின் ஒரு நாள் அக் குழந்தைகளுக்குப் பழக்கமான உணவு வகைகளை ஒரு இடத்தில் வைத்து குழந்தைகளை அந்த இடத்துக்கு வரவழைத்தான். உணவைக் கண்ட குழந்தைகள் 'புகா, புகா' என்று ஆரவாரித்து ஓடி வந்தன!

சங்கத் தமிழ் இலக்கியங்களில் 'புகா' என்ற சொல்லுக்கு 'உணவு' என்று பொருள். இந்த நிகழ்ச்சியால் தமிழ் மொழியே இயற்கையான மொழி என்று அரசன் தீர்மானித்தானாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊராங் ஊட்டான் (Orang - Outong)

என்ன, பெயர் வேடிக்கையாக இருக்கிறதா? வேறொன்றும் இல்லை. எங்கள் மூதாதையர் தான்! போர்னியோ என்னும் இடத்திலுள்ள மனிதக் குரங்கு தான் இது. நாலரை அடி உயரம் வரை வளரும். இக் குரங்கிலுள்ள சிறப்பு அம்சம்: இதன் மூளை மனித மூளையுடன் ஒத்திருப்பது தான். இதை ஒரு வகையில் காட்டு மனிதன் என்றே அழைக்கலாம்.

இந்த வானரம் பகலில் அதிகம் திரிவதில்லை. பகல் முழுவதும் மரத்தில் உறங்கிவிட்டு இரவிலேயே இரைதேடுவதற்கு மரத்திலிருந்து இறங்கும். வம்பில்லாத வாழ்க்கைதான். இவற்றின் மயிர் சிவப்பு நிறமாக இருக்கும். தன் கைகளையும் கால்களையும் பயன்படுத்தி நடக்கும்.

இந்த ஊராங் ஊட்டானின் குட்டி அசல் சிறு குழந்தைகளைப் போலத்தான் இருக்கும். அதனிடம் ஏதாவது சேஷ்டை செய்தால் பெரும் கூச்சலிடும். ஆனால் தட்டிக் கொடுத்து சமாதானம் செய்தால் உடனேயே எல்லாவற்றையும் மறந்து குஷியாகிவிடும். இவற்றின் குரலும் குழந்தைகளின் குரலைப் போலவே இருக்கும்.

இவை பொதுவாக இலை, பழங்கள் என்பவற்றை உண்ணும். மங்குஸ் தான் பழத்தையும் விரும்பி உண்ணும். இவை தண்ணீரை பாத்திரத்திலிருந்து குடிப்பதில்லை. தங்கள் விரல்களை தண்ணீரில் நனைத்து வாய்க்குள் விடும். பழகிய குரங்குகள் மட்டும் பாத்திரத்தில் தண்ணீர் குடிக்கும்.

இந்த ஊராங் ஊட்டான் பெரும்பாலும் தனித்தே வாழ விரும்பும். கூட்டு வாழ்க்கை ஏனோ அதற்குப் பிடிப்பதில்லை. ஆண் தனியாக இருக்கும். அல்லது ஒரே பெண்ணுடன் (மனைவி?) இருக்கும். இவற்றின் குட்டிகளும் இவற்றுடன் இருக்கும். தான், தன் குடும்பம் என்று இருக்கும் இவை வெளியிடங்களில் அதிக ஈடுபாடு காட்டுவதில்லை. பிழைக்கத் தெரிந்த வானரம்!

---

இராமபாணம்

✣ அடுக்கி வைத்திருந்த உங்கள் பெரிய புத்தகமொன்றை எடுத்து விரித்துப் பார்த்தால், அதில் சிறு சிறு ஊசித்துவாரம் போன்ற துளைகள் அநேக தாள்களுக்கு ஊடுருவி இருப்பதைச் சில நேரங்களில் காணலாம். இப்படித் துளைகளையிட்டது ஒரு சிறு பூச்சி. அதன் பெயர்தான் 'இராமபாணம்'

இது இறக்கையில்லாத ஒரு வகைப் பூச்சி பெரும்பாலும் கண்ணுக்குத் தெரியாமல் மறைவிடங்களிலேயே வாழும். புத்தகம், துணி போன்ற பிற பொருட்களைக் கடித்துத் தின்று நாசமாக்கிவிடும். இவற்றின் வாய் உறுப்புக்களும் கடிப்பதற்கு ஏற்றவாறு விசேஷமாக அமைந்துள்ளன. இதில் விசேட பண்பு என்னவென்றால் மற்றைய பூச்சிகளைப் போல உருவமாற்றம் அடைவதில்லை. பிறந்ததிலிருந்து அதே உருவ அமைப்புடன் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைபிள் (வேதாகமம்)

உலகில் மிகவும் புகழ் பெற்ற நூல் கிறிஸ்தவர்களின் வேதாகமம். முதன் முதலில் அச்சுவாகனம் ஏறிய நூல் என்பதுடன் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்ட நூல் என்ற பெருமையும் வேதாகமத்திற்கு உண்டு. இதற்கு 'விவிலியம்' என்ற பெயரும் உண்டு.

வேதாகம நூல் ஆங்கிலத்தில் 'பைபிள்' (Bible) என்று அழைக்கப்படுகிறது. இந்த பைபிள் என்ற ஆங்கிலச் சொல் 'பிபினூஸ்' என்ற கிரேக்கச் சொல்லில் இருந்தே தோன்றியது என்பர். 'பிபினூஸ்' என்பது எழுதப் பயன்படுகின்ற ஒரு புல் தண்டின் பெயர். பிபினூஸ் என்ற சொல்லில் இருந்து பிபினம் (புத்தகம்) என்ற சொல் மருவி, இறுதியில் பைபிளாகியது என்றும் கூறப்படுகின்றது.

இயேசுக் கிறிஸ்துவின், கடவுளின், பொன்மொழிகளைத் தாங்கியுள்ள நூல் என்று கிறிஸ்தவர்களால் போற்றப்படும் பைபிளின் பெரும் பகுதி ஆரம்பத்தில் 'எபிரேய' மொழியிலேயே இருந்தது. பின்பு நாற்பது பேர் கொண்ட ஒரு குழு பைபிளை முற்றும் முழுதாக கிரேக்க மொழிக்கு மாற்றியது. இந்த மொழி பெயர்ப்பை 'செப்டுவாஜின்ட்' என அழைப்பர். ஆனால் பின்னொரு காலத்தில் கிரேக்க பேரரசு வீழ்ச்சி கண்டு உரோமப் பேரரசு எழுச்சி கண்டதால் கிரேக்க மொழியில் இருந்த பைபிள் 'புனித ஜெறோம்' என்பவரால் இலத்தீன் மொழிக்கு மாற்றப்பட்டது. இந்த மொழி பெயர்ப்பை 'வல்கேற்' என்று அழைப்பர்.

இலத்தீன் மொழியில் இருந்தே பைபிள் ஏனைய மொழிகளுக்கு மொழி பெயர்க்கப்பட்டது. இன்று சகல மொழிகளிலும், ஒரு புனித நூலாக, இறைவார்த்தைகளின் பெட்டகமாக கிறிஸ்தவ மக்களால் போற்றப்பட்டு வருகிறது பைபிள். ○

## ஒதுங்கி வாழாதீர்

சிலர் ஒருவித அச்சத்தினாலும், வெட்கத்தினாலும், தாழ்வு மனப்பான்மையினாலும் மற்றவர்களோடு சேர்ந்து பழகாமல் ஒதுங்கி வாழ்கிறார்கள். பலர் கூடும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள மறுக்கிறவன், தன்னைத் தானே மோசமாகக் கெடுத்துக் கொள்கிறான். தனது வாழ்வில் பல நல்ல வாய்ப்புகளை இழந்து விடுகிறான். அழகுக்காக ஒட்டி வைத்த வண்ணக் கடதாசியைப் போல, ஒருவர் வீட்டுக்குள்ளேயே ஒதுங்கி இருந்து விடக்கூடாது. அப்படிப்பட்டவர்களின் வாழ்க்கையில் சுவை இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கோவடிகள்

கண்ணகி — கோவலன் கதையை நீங்கள் படித்திருப்பீர்கள். அதை அழகான செய்யுள் வடிவில் எழுதியவரே இளங்கோவடிகள். இவர் சுமார் 1.800 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். சேரநாட்டு மன்னன் சேரலாதனின் இளைய மகன். இவருடைய அண்ணன் சேரன் செங்குட்டுவன். அண்ணன் இருக்க இவருக்கே அரச பட்டம் கிடைக்கும் என்று நிமித்திகர் ஒருவர் சோதிடம் கூறினாராம். 'அண்ணனுக்குப் பட்டம் கிடைப்பது தான் முறை. ஆகையால் தம் அண்ணனே அரசராக வேண்டும்' என்று விரும்பினார் இளங்கோ. உடனே அவர் தம் அரச வாழ்க்கையையும், அரண்மனையையும் கைவிட்டார். துறவியானார். குணவாயில் என்ற ஊரில் சமணரின் கடவுளான அருகன் கோயிலில் தங்கித் தவம் இருந்தார்.

இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழிலும் இளங்கோவடிகள் வல்லவர். தமிழ் நாடு முழுவதையும் நன்கு அறிந்தவர். கோவலன்- கண்ணகி வரலாற்றை நேரில் கேட்டறிந்து அவர்களைக் காப்பியத் தலைவர்களாக வைத்து அரிய நூ ஒன்றை இயற்றினார். அதுதான் சிலப்பதிகாரம் என்ற நூல். கண்ணகியின் கால் சிலம்பின் காரணமாக நடந்த கதையாதலால் இந்நூலுக்கு இப்பெயர் இடப்பட்டது. (சிலம்பு + அதிகாரம் - சிலப்பதிகாரம்) இந்நூலில் உள்ள பாடல்கள் சில இசையுடன் பாடக் கூடியவை. முறை தவறிய மன்னன் கேடு உறுவான். கற்பிற் சிறந்த பெண்களை உலகம் தெய்வமாக மதிக்கும். தீயது செய்வோருக்கு விதி தீயதையே விளைவிக்கும் என்ற கொள்கைகளை இவர் தம் நூலில் எடுத்துக் கூறியுள்ளார்.

இளங்கோவடிகளின் காலத்தில் சோழ நாடு, பாண்டிய நாடு சேர நாடு என்று தனித்தனி நாடுகள் இருந்தன. எனினும் அந்த மூன்று நாடுகளையும் ஒன்று சேர்த்துத் தமிழ்நாடு என்று இவர் குறிப்பிடுகின்றார். தம் நூலில் சைவம், வைணவம், சமணம், பௌத்தம் ஆகிய எல்லா சமயங்களையும் இவர் சிறப்பித்துள்ளார். ஆயினும் இவர் சமண மதத்தவராகவே கருதப்படுகிறார்.

---

○ தங்களுக்குத் துன்பம் நேரினும் மற்றவரை ஆபத்திலிருந்து காக்கத் துணிபவரே மிக உயர்ந்த மனிதர்கள்; மாந்தருக்குள் மாணிக்கம் போன்றவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈக்வடோர்

பூமத்திய ரேகைக்குக் குறுக்கே அமைந்துள்ள நாடு. ஈக்வடார் என்பது பூமத்திய ரேகையைக் (equator) குறிக்கின்றது. இந்த ஈக்வடாரின் முதுகெலும்புபோல ஆண்டிஸ் மலைகள் நீண்டு கம்பீரமாக காட்சி தருகின்றன.

ஈக்வடாரில் இயற்கை படைத்த எல்லாமே அழகு தான். அங்கே மலர்கள் மட்டுமல்ல, குருவிகள் கூட அழகான நிறங்களில் இருக்கின்றன. கருஞ்சிகப்பு நிறமுடைய 'பிளை காட்சா' இதற்கு சிறந்த எடுத்துக் காட்டு. அது மட்டுமல்ல; இங்கு அழகிய நிறங்களில் இயற்கை அளித்திருந்த பறவைகள், மலர்கள், பட்டுப் பூச்சிகள் ஆகியவற்றின் பளபளப்பான வண்ணங்கள் அங்கே நெய்யப்படும் துணிகளிலும் காணப்படுகின்றன.

ஈக்வடாரில் பல்வேறுபட்ட வானிலைகள் ஒரே நேரத்தில் ஏற்படும் எப்படி என்கிறீர்களா? ஈக்வடாரின் அண்டீஸ் மலையின் உச்சியில் இருக்கும் நகரங்கள் ஒரேநேரத்தில் நான்கு பருவநிலையையும் அனுபவிக்கின்றன.

இங்கே சில நேரத்தில் மூடுபனி ஏற்படும். மாறிமாறி ஈக்வடாரில் உள்ள பகுதிகள் மூடுபனியினால் மூடப்பட்டுக் கொண்டே இருக்கும். அழகை அள்ளி வழங்கும் ஈக்வடாரின் பிரதேசங்கள் இப்பனியினால் மூடப்பட்டிருப்பது எரிச்சலைத்தந்தாலும் அதுவே ஒரு அழகுபோல ரசிக்கக் கூடியதாகவே இருக்கும்.

மொத்தத்தில் பசுமையும் பல விதவர்ண ஜாலமும் கொண்ட ஓர் அழகிய நாடு ஈக்வடார். இயற்கை தான் எவ்வளவு ஒப்பற்ற அழகினை எல்லாம் படைக்கின்றது? இந்தஇயற்கை அழகை மிஞ்சமுடியாது! இயற்கையை அழிப்பவரே அதிகரித்துள்ள இவ்வுலகில் இயற்கையின் அழகையே முதன்மையாகக் கொண்டு அதன் வழியைப் பின்பற்றும் ஈக்வடார் நாடும் அதன் மக்களும் போற்றப்பட வேண்டியவர்களே!

---

## கம்பர்

தமிழில் இராமாயணத்தைப் பாடியவர் 'கம்பர்.' கல்வியில் பெரியவர் கம்பர் என்று கூறுவதுண்டு.

தமிழ் நாட்டின் மிகச் சிறந்த புலவர்களுள் கம்பர் குறிப்பிடத்தக்கவர். மாயூரத்திற்கு அருகிலுள்ள திருவழுந்தூரில் இவர் பிறந்தார் என்று கூறுவர். சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்பு கம்பர் வாழ்ந்திருந்தார். ஒட்டக் கூத்தர், செயங் கொண்டார் என்ற புலவர்களும் இவர் காலத்தில் வாழ்ந்தவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்தவருள் மிகக் கொடூரமான முகத்தோற்றம்கொண்ட அப்பாச்சிகளை நீங்கள் அறிந்திருப்பீர்கள். 'ராணி கொமிக்ஸ்' என்ற இதழில் 'செவ்விந்தியர்கள்' என்று (Red Indians) வர்ணிக்கப்படுபவர்கள் இவர்கள் தான்.

# 'அப்பாச்சிகளின்' தலைவர் ஜரானமோ

மெக்ஸிகோ வீரர்களை கணக்கு வழக்கின்றி கொன்று குவித்து மனித இனத்தின் புலிகள் என்று வர்ணிக்கப்பட்ட அப்பாச்சிகளின் கடைசித் தலைவர் தான் இந்த ஜரானமோ. 1850 ம் ஆண்டு ஒரு கொடுமையான நாளில் மெக்ஸிக்கோவிலுள்ள 'ஜேனோஸ்' புறநகர்ப் பகுதியில் கூடாரமிட்டிருந்த 25 அப்பாச்சிப் பெண்களையும், பிள்ளைகளையும் கொடூரமானமுறையில் மெக்சிகோ போர் வீரர்கள் கொன்று குவித்தார்கள். இவர்களில் ஜரானமோவின் இளம் மனைவியும் மூன்று பிள்ளைகளும் அடங்குவர்.

இந் நிகழ்வு ஜரானமோவைப் பாதித்தது. அவர் கொதித்தெழுந்தார். தன் வாழ்நாள் முழுவதும் மெக்ஸிகோ ஆட்களை வெறுத்த ஜரானமோ, பழிவாங்க வேண்டும் என்ற வெறியினால் தூண்டப்பட்டு மிக அஞ்சத்தக்க அப்பாச்சித் தலைவர்களில் ஒருவரானார்.

பழிவாங்கும் உணர்வு யாரைத்தான் விட்டது? ஜரானமோவின மனதில் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி இருந்ததால் பல மெக்ஸிகோவினரைக் கண்மண் தெரியாமல் கொன்று குவித்தார். பலரால் வெறுக்கப்பட்ட அதே வேளை தைரியத்திற்கும் அஞ்சா நெஞ்சத்திற்கும் பெயர் பெற்றவராகவும் விளங்கினார்.

இறுதியாக அமெரிக்க ராணுவத்திடம் சரணடைந்த அப்பாச்சிகளின் தலைவர் ஜரானமோ, தனது எண்பதாவது வயதில் 1909 ம் ஆண்டு ஒக்லஹாமாவில் டச்சு ரிஸ்பார்ம்ட் சேச்சின் ஓர் அங்கத்தினராகவே இறந்தார்.

இவரே பலரையும் கலக்கிய அப்பாச்சிகள் இனத்தின் இறுதித் தலைவராகவும் கருதப்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலை தீவு

நீலவானம்! அதன் கீழே அழகாய் பரந்துகிடக்கும் கடல் பரப்பு. தூய்மையான காற்றோட்டம்; கண்ணுக்கெட்டிய பகுதியெல்லாம் பசுமை. -இதுதான் 'மாலே' யைத் தலைநகராகக் கொண்ட மாலை தீவு. மாலைதீவு மக்கள் சற்றே கூச்ச சுபாவம் உடையவர்கள். இங்கே பிரார்த்தனைகளில் அதிக ஈடுபாட்டுடன் பங்கு கொள்ளும் அதேவேளை, காற்பந் தாட்டம் போன்ற விளையாட்டுக்களிலும் ஈடுபாடுடையவர்களாக இருப்பார்கள். இங்குவரும் சுற்றுலாப் பயணிகளோ ஏராளம்.

மாலைதீவில் புதுமையான ஒரு சந்தை கப்பல் சந்தை (Feloah Market). இந்நடமாடும் கப்பல் சந்தையில் எல்லாவித நாடுகளினதும் பழவகைகள், காய்வகைகள் மற்றும் சந்தையில் காணப்படும் அனைத்துப் பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன. நம் நாட்டில் இப்படியொரு நடமாடும் கப்பல் சந்தையை நினைத்தும் பார்க்க முடியாது.

மாலைதீவில் மீன்கள் பிரதான இடம் வகிக்கின்றன. மாலைதீவுக் கடற்கரையே ஒரு கண்கொள்ளாக்காட்சி தான். மீனவர்கள் தாம்பிடித்த மீன்களை உற்சாகமாக அலங்காரமாகக் கடைபரப்பும்போது அந்தமீன்கள் அடுக்கப்பட்டிருக்கும் நேர்த்தியால் மீன் சந்தையே களைகட்டுகின்றதென்றால் பாருங்களேன்! இங்கு பிடிக்கப்படும்முக்கிய மீன்வகை 'டியூனா.' இதுஇங்கே பிரதான இடம் வகிக்கின்றது. மாலைதீவு உணவுக்கடைகளில் மீன்களால் செய்யப்பட்ட பலவகையான உணவுவகைகள் விற்கப்படுகின்றன. மீனை 'மாஸ்' என்று அழைக்கிறார்கள்.

மாலை தீவில் பணம் 'ருபாயா' என வழங்கப்படுகிறது. மாலைதீவு மக்கள் பழகுவதற்கு இனிமையானவர்கள். நட்பும், பாசமும் கொண்டவர்கள், பல்வேறு கலை நிகழ்ச்சிகளில் ஈடுபாடு கொண்ட இவர்கள் சற்றே கூச்ச சுபாவம் உடையவர்கள்.

மாலைதீவு சிறிய பரப்பாக இருந்தாலும் தன்வளத்தாலும், பசுமையாலும், அழகாலும் சர்வதேச மட்டத்தில் முக்கிய இடம் வகிக்கின்றது. அதுமட்டுமல்ல! பெரும்பாலான சுற்றுலாப்பயணிகளின் இதயங்களையும் கொள்ளை கொண்டுள்ளது. இறுதியாக நடைபெற்ற 'சார்க்' உச்சிமகாநாடு இங்குதான் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறார் பாடசாலை

* * * * * *

இப்போதெல்லாம் மூலைக்கு மூலை சிறுவர் பாடசாலைகளைக் காணலாம். மிகவும் பின் தங்கிய சிற்றூர்களிற் கூட சிறுவர் பாடசாலைகள் இருக்கின்றன. இதற்கு முக்கிய காரணம் தமது ஊர்ச் சிறு பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் நாட்டம் கொண்டதல்ல. அந்தந்த ஊரிலுள்ள சிறிது படித்த பெண் பிள்ளைகள் தமக்கு சிறுவருவாய் தேடிக் கொள்வதற்காகவும் பொழுது போக்குக்காகவும் இந்தப் பாடசாலைகளை நடத்துகிறார்கள். மிக அருமையாகச் சில பாடசாலைகள் சிறார்களின் கல்வி வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு நடைபெறுகின்றன.

சுமார் ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் சிறுவர் பாடசாலையைக் காண்பதே எமது நாட்டில் அபூர்வம்.

1816 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் றொபேட் ஓவின் என்பவர் சிறாருக்கான ஒரு பாடசாலையை ஆரம்பித்தார். 1907 ஆம் ஆண்டு இங்கிலாந்து கல்விப்பகுதியாரே சிறுவர் பாடசாலைகளை அமைப்பதில் கவனம் செலுத்தினர். அதே ஆண்டில் இத்தாலிய நாட்டில் மொன்டிசோறி என்ற அம்மையார் சிறார் பாடசாலைக்கான ஒரு திட்டத்தை ஒழுங்கு முறையாக வகுத்தார். அந்தத் திட்டம் உலகின் பல பகுதிகளில் மிகவும் பிரபலமாகி விட்டது. சிறார் படாசாலையை 'மொண்டிசோறி' ஸ்கூல் என்று குறிப்பிடுவதும் ஒரு வழக்கமாகி விட்டது.

முதலில் சிசுக்கள் பாடசாலை (Infant School) என்றிருந்ததை 1907 ஆம் ஆண்டிலேயே சிறார் பாடசாலை (Nursery School) என்று வழங்கத் தொடங்கினார்கள்.

சிறு குழந்தைகளுக்கு முறையான கல்விப் பாடங்களைச் சொல்லிக் கொடுப்பது சிறார் பாடசாலைகளின் நோக்கமல்ல. அவர்களின் உள, உடல் வளர்ச்சியை ஊக்குவிப்பதே சிறார் பாடசாலைகளின் உண்மையான நோக்கம்.

ஆராய்தல், சோதித்துப் பார்த்தல் ஒன்றைப் பார்த்து அதன்படி செய்தல் முதலியவற்றுக்கான சூழ் நிலையை ஏற்படுத்தி அவருடைய உள வளர்ச்சியைத் தூண்டிவிடுவதுவே சிறார் பாடசாலைகளின் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரோஜினி நாயுடு

மகாத்மா - காந்தியின் காலத்தில் வாழ்ந்த புகழ்பெற்ற ஒரு பெண்மணி சரோஜினி நாயுடு. இந்தியாவின் ஹைதராபாத் நகரில் 1879 ல் பிறந்தவர். இவருடைய தகப்பனார் இங்கிலாந்தில் பட்டம் பெற்று ஹைதராபாத் கல்லூரி ஒன்றின் முதல்வராக இருந்தவர். தாயாரும் இளம் வயதிலேயே கவிதைகள் எழுதும் ஆற்றல் உள்ளவர். இத்தகைய பெற்றோருக்குப் பிறந்த சரோஜினிதேவியும் இளம் வயதிலேயே கல்வியிலும் கலைஇலக்கியங்களிலும் மிகவிருப்புடையவராகஇருந்தார்.

சரோஜினிதேவி தமது 12 ஆவது வயதிலேயே மெற்றிக்குலேசன் பரீட்சையில் மாகாணத்திலேயே முதல்வராகத் தேறினார். தமது 13 வது வயதில் 1300 வரி கொண்ட ஒரு நீண்ட ஆங்கிலக் கவிதையை எழுதினார். 'ஏரியின் சீமாட்டி' (Lady of the Lake) என்பது அதன் பெயர்.

அதே ஆண்டிலேயே 2000 வரி கொண்ட நாடகம் ஒன்றையும் எழுதினார். தினந்தோறும் நிறைய வாசிப்பார்.

பின்னர் இங்கிலாந்து சென்று கல்வி கற்று பட்டங்களும் பெற்றார். 1898 ல் சாதிக்கட்டுப்பாடுகளை மீறி டாக்டர் கோவிந்தராஜ் நாயுடுவை மணம்புரிந்தார். (சரோஜினிதேவி பிராமண குலத்தவர்)

1915 ல் லண்டன் நகரில் மகாத்மா காந்தியைச் சந்தித்தார். அன்று தொடக்கம் சரோஜினி தேவியும் தேச சேவகியானார். பல சுதந்திரப் போராட்டங்களில் பங்கு கொண்டார், சிறையும் சென்றார்.

மகாத்மா காந்தியால் மிகவும் பராட்டப்பெற்ற பெண்மணிகளில் இவரும் ஒருவர். 'கவிக்குயில்' என்று புகழப்பட்டவர்

1947 ல் இந்தியா சுதந்திரம் பெற்றதும் உத்திரப்பிரதேசத்தின் கவர்னராக நியமனம் பெற்றார். கவர்னர் பதவியில்இருக்கும் போதே 1950 மார்ச் 2 ல் காலமானார்.

---

() நல்லெண்ணெய், என்ற எள்நெய்யே ஆதிகாலத்திலிருந்து உபயோகமாகும் தானியநெய் எனலாம். 'நல்லெண்ணெய்' என்ற சொல்லைப் பிரித்தால் நல்ல + எள் + நெய் என்று வரும். எள் நெய் என்பதால் எண்ணெய் எனப்பட்டது. ஆனால், அதன் பின்னால் பிற தானியங்களிலிருந்து பெறப்பட்ட நெய் வகைகளும் எண்ணெய் என்றே பேசப்பட்டன. தேங்காயெண்ணெய், வேப்பெண்ணெய் என்றவாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குலசேகரன் படி

வைஷ்ணவ ஆலயங்களில் உள்வாயிற் படிக்கு 'குலசேகரன்படி' என்ற பெயருண்டு. இந்தப் பெயர் எப்படி வந்தது தெரியுமா?

சேரநாட்டில் - திருவஞ்சைக் களத்தில் அரசர் குலத்தில் மாசி மாதத்தில் அவதரித்தவர் குலசேகராழ்வார். சேர நாட்டு மன்னன். ஆனால் பக்தி உணர்வு மேலிடப் பெற்றவர். பெருமானுடைய இன்ப துன்பங்களை தம் சுகதுக்கங்களாக நினைத்து உருகியதால் 'பெருமான்' என்ற பெயரும் இவருக்கு வழங்கலாயிற்று.

இறைவனில் மிகுந்த அன்பு கொண்ட ஆழ்வார் அவனையும் அவன் அடியாரையும் இவர் ஆதரித்தார்.

'செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா, நின்கோயிலின் வாயினில்
அடியாரும், வானவரும், அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே,

என்று இவர் உருகி வேண்டியமையில் ஆலயங்களின் உள்வாயிற் படி ' குலசேகரன் ' படி என வழங்கலாயிற்று.

இறைவனிடம் மிகுந்த பக்தி கொண்டு பெருமானைத் தரிசித்து அவனடியாருடன் வாழ்வதையே பெரும் பேறாக நினைத்து உலக வாழ்வில் வெறுப்புற்றிருந்த குலசேகராழ்வார் அருளிய பிரபந்தம் பெருமாள் திருமொழி. நூற்றியைம்பது பாசுரங்களைக் கொண்ட இத் திருமொழி தமிழ் பிரபந்தங்களுள் சிறப்பாக வைத்துப் போற்றப்படுகின்றது.

---

## சரவணமுத்துப்பிள்ளை

யாழ்ப்பாணத்திலுள்ள ஊரெழுவில் பிறந்த சைவசித்தாந்தச் சொற் பொழிவாளர் சரவணமுத்துப்பிள்ளை. செய்யுளியற்றும் திறமை வாய்ந்த இவர், தமிழ்நாட்டிலும் பல சொற்பொழிவுகளை நிகழ்த்தியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகை மாற்றிய புத்தகங்கள் ★ ☆

"Books That Changed the World" என்ற பெயரில் Robert Downs என்பவர் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார்.

1956 ம் ஆண்டில் இந்தப் புத்தகம் முதலில் வெளிவந்தது.

அதற்குப் பின்னரும் பல பதிப்புகள் வெளியாகி பல லட்சக் கணக்கான பிரதிகள் விற்பனையாகி யிருக்கின்றன.

"புத்தகங்கள் பலமான ஆயுதங்கள்" என்பது இந் நூலாசிரிய ரின் கருத்து.

ஒவ்வொரு புத்தகமும் உலகில் எத்தகைய மாற்றங்களை யெல் லாம் எவ்வாறு கொண்டு வந்துள்ளன என்பதை இந் நூலாசிரியர் மிகவும் அழகாக விளக்கியிருக்கிறார்.

உலகில் மிகப் பெரிய மாற்றங்கள் பலவற்றிற்கு சில புத்தகங் களே காரணமாக இருந்திருக்கின்றன.

பல புத்கங்கள் நல்ல பல மாற்றங்களைக் கொண்டு வந்துள்ள போதிலும் சில புத்தகங்கள் உலகிற்கு படு பாதகமான கெடுதல்களை யும் செய்திருக்கின்றன.

ஹிட்லர் எழுதிய "மெயின் கேம்ஃப்" என்ற புத்தகம் இரண் டாம் உலக மகா யுத்தத்தை எதிர் கூறியதுடன் அதனால் விளைந்த சாவுகளுக்கும், அழிவுகளுக்கும் காரணமாக இருந்திருக்கிறது.

உலகை மாற்றிய புத்தகங்கள் என்னும் இந்த நூல் மிகவும் எளிமையாகவும் சுவையாகவும் எழுதப்பட்டிருக்கிறது.

வாசிக்கும் போது அலுப்புத் தட்டவில்லை.

நிறைய விஷயங்களைத் தெரிந்து கொள்ளவும் முடிகிறது.

புத்தகங்களை 'நல்ல' புத்தகங்கள் 'கெட்ட' புத்தகங்கள்

என்று பாகுபாடு செய்யாமல், உலகில் ஏற்பட்டுள்ள அடிப்படை யான பல மாற்றங்களுக்குக் காரணமான பல புத்தகங்களைப் பற் றியே ஆசிரியர் இதில் குறிப்பிடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல், விஞ்ஞானம், பொருளாதாரம், உளவியல், வானசாஸ்திரம் என்று இன்னோரன்ன பல துறைகளில் மாற்றங்களை ஏற்படுத்திய பல புத்தகங்களைப் பற்றிய விபரங்களும் விமரிசனங்களும் இந்த நூலில் இருக்கின்றன.

மொத்தம் பதினாறு நூல்களைப் பற்றிய விபரங்கள் இந்த நூலில் உள்ளன.

ஒவ்வொரு நூலிலும் சொல்லப்பட்டுள்ள அடிப்படைக் கருத்துக்கள் தெளிவாகத் தரப்பட்டிருப்பதோடு வரலாற்று ரீதியில் ஒப்பு நோக்கி ஆராயப்பட்டும் உள்ளன.

இந் நூலில் இடம் பெற்றுள்ள புத்தங்களின் பெயர்களும் அவற்றின் ஆசிரியர்கள் பெயர்களும்:

1. The Prince — Machiavelli
2. Common Sense — Thomas Paine
3. "Wealth of Nations" — Adam Smith
4. 'Essay on Principle of Population' — Thomas Malthus
5. Civil Disobedience — Henry David Thoreau
6. Uncle Tom's Cabin - Harriet Beecher Stowe
7. 'Das Capital' — Karl Marx
8. 'The Influence of Sea Power upon History — Alfred Mahan
9. 'The Geographical Pivot of History' — Sir Haltord Mackinder
10. 'Mein Kampf' — Adolf Hitler
11. 'De Revolutionsus Orbium Celestium' — Nicolus Copernicus
12. 'De Motu Cordis' — William Harvey
13. 'Principia Mathematica' — Sir Isaac Newton
14. 'Origin of Species' — Charles Darwin
15. 'The Interpretation of Dreams' — Sigmund Freud
16. 'Relativity, The Special & General Theories' — Albert Einstein



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டறிதல்

கண்டு அறிதல் எல்லாம் கண்களாலேயே என்று பொதுவாக நம்பிக்கொண்டிருக்கிறோம்.

தவறு.

'அதோ ஒரு மரம் நிற்கிறது' என்று சொல்லும் போது அந்த மரத்தைக் கண்களால் கண்டு சொல்கிறோம்.

சரி.

வானொலியில் கேட்கும் ஒரு பாடலைக் குறித்து 'இந்தப் பாட்டை கே. பி. சுந்தராம்பாள் பாடுகிறார்' என்கிறோம்.

கே. பி. சுந்தராம்பாள் பாடுவதை நாங்கள் கண்களால் கண்டோமா? இல்லை. செவிகளால் கேட்டே அதை இன்னார் பாடுகிறார் என்று கண்டறிந்தோம்.

'இங்கே நல்ல காற்று வீசுகிறது' என்று சொல்லும் போது காற்று வீசுவதைக் கண்ணால் கண்டோமா? இல்லை. உடம்பினால் அதை உணர்ந்தே கண்டறிந்தோம்.

'இந்தப்பழம் நல்ல இனிப்பாக இருக்கிறது' என்று சொல்லும் போது நாவினால் அதன் சுவையைக் கண்டறிந்தோம்.

'இந்தப் பூ நல்ல மணம் வீசுகிறது' என்னும் போது பூவின் நறுமணத்தை மூக்கினால் கண்டறிந்தோம். காணல் – கண்டறிதல் என்ற நிகழ்ச்சி கண்களினால் மட்டும் நடப்பவையல்ல.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து புலன்களினாலுமேயே நாம் கண்டறிகிறோம்.

# ஒயிற் கும்மி

'ஒயில்' என்பது ஒரு வகைக் கூத்து. இதனை ஒயிலாட்டம், ஒயிற்கும்மி என்றும் அழைப்பர். பெரும்பாலும் கிராமப் புறங்களில், இந்துக் கோயில்களில் இவை ஆடப்படும்.

'கும்மி' என்பது பொதுவாக பெண்களாலேயே ஆடப்படுவது. பெண்கள் பலரும் கூடி நின்று பாடிப் பாடி கும்மியடித்து ஆடுவர். ஆனால் இதற்கு விதிவிலக்காக இந்த ஒயிற்கும்மியை ஆண்களே ஆடுவர். தமிழ் நாட்டின் தென் பகுதியில் இக் கூத்துக்கள் பரவலாக ஆடப்படும். எதாவது ஒரு பழங் கதையையோ, அல்லது வரலாற்றையோ இசையோடு பாடிக் கொண்டு ஆடுவர். இரவு இரவாக இளைஞர் இக் கூத்தினை ஆடி மகிழ்வார்கள்.

இதில் ஆடும் ஆடவர்கள் தலைப்பாகை முதலிய உடைகளை அழகாக அணிந்து கொண்டு தம் கைகளில் கைக் குட்டைகளை ஏந்தி ஆடுவார்கள். இரு வரிசையாக எதிர் எதிராக நின்று இளைஞர்கள் அனைவரும் பாடிக் கொண்டே ஆடும் நேர்த்தியும், ஒழுங்கும் வியக்கத் தக்கதாகும். சிலர் இதை ஒரு பாரம் பரியக் கலையாகவே போற்றி வருகிறார்கள்.

நாடோடி நடனங்களில் ஒன்றாக மதிக்கப்படும் இக் கும்மியில் வள்ளியம்மை ஒயிற்கும்மி, சிறுதொண்டர் ஒயிற்தும்மி எனப் பல வகை உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சியாக இருக்க ஏழு விதிகள்

உங்கள் வாழ்க்கை மகிழ்ச்சியாக இல்லையா? எந்த நேரமும் ஏதோ கவலையாக இருக்கிறதா? எந்த விஷயத்திலும் மனம் ஈடுபாடு கொள்ளாமல் சோர்வாக இருக்கிறதா? — அப்படியானால் பின்வரும் ஏழு விதிகளையும் படியுங்கள்.

1. 'நான் எப்போதும் உற்சாகமாக இருப்பேன்' என்று உறுதி கொள்ளுங்கள்.

2. மற்றவர்களுடன் நட்போடு பழகுங்கள்.

3. மற்றவர்களிடமுள்ள குறை குற்றங்களைப் பெரிது படுத்தாமல் அவர்களிடமுள்ள நல்ல குணங்களைக் கருத்தில் கொள்ளுங்கள்.

4. எந்த ஒரு செயலைச் செய்யும் போதும் 'வெற்றி பெறுவேன்' என்ற நம்பிக்கையோடு செயற்படுங்கள்.

5. ஒரு நாளில் குறைந்தது மூன்று முறையாவது சிரியுங்கள்.

6. கவலையளிக்கக் கூடிய, உங்களுக்கு விருப்பமில்லாத எண்ணங்களுக்கு மனத்தில் இடமளியாதீர்கள்.

7. எந்தச் சந்தர்ப்பத்திலும் பதற்றமடையாது, நிதானமாகவும், புத்திசாலித் தனமாகவும் நடந்து கொள்ளுங்கள்.

இந்த ஏழு விதிகளையும் தொடர்ந்து இருபத்தொரு நாட்களுக்கு தவறாமல் கடைப் பிடித்துப் பாருங்கள்— வாழ்வில் வித்தியாசத்தை மகிழ்ச்சியைக் காண்பீர்கள்.

---

ஒரு நல்ல செயலைச் செய்ய வேண்டுமென்று நீங்கள் தீர்மானித்தால் உடனடியாகவே அதைச் செய்து விடுங்கள். தாமதித்தால் ஒரு வேளை நீங்கள் அந்த நல்ல செயலைச் செய்ய முடியாமலும் போகலாம்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ சங்கம் அமைத்துத் தமிழ்

திராவிட இன மக்களே உலகில் முதலில் தோன்றிய மூத்த குடியினர். திராவிட இனத்தில் முக்கியமானவர்கள் தமிழ் மக்கள். 'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திய மூத்த குடியினர்' என்று பெருமையாகச் சொல்லிக் கொள்பவர்கள். பெருமையாகச் சொல்லிக் கொண்டாலும் உண்மையும் அது தான். பல ஆய்வாளர்கள் இதைத் தக்க ஆதாரங்களுடன் உறுதிப் படுத்தியிருக்கிறார்கள்.

இன்றைய தமிழகத்துக்கு தெற்கே, அதனோடு இணைந்ததாக இலங்கை உள்ளிட்ட பெரிய தொரு நிலப்பரப்பு இந்து சமுத்திரத்தில் இருந்தது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய நிலை இது.

அந்த நிலப்பரப்புக்கு 'லெமூரியா' என்று பெயர். 'குமரிக் கண்டம்' எனப்பட்டதும் அதுவே, அக் கண்டத்தில் குமரிமலை உள்ளிட்ட பல மலைகளும், பஃறுளி ஆறு போன்ற பல ஆறுகளும் இருந்தன. சங்க இலக்கியச் செய்யுள்களால் இது நிரூபணமாகிறது.

பஃறுளி ஆற்றின் கரையிலே தென்மதுரை என்ற நகரம் இருந்தது. பாண்டிய மன்னர்கள் அதை ஆண்டு வந்தார்கள். தலைச்சங்கமான முதற் தமிழ்ச் சங்கமும் அந் நகரத்தில் பாண்டிய அரசன் ஆதரவில் செழித்திருந்தது.

முதற் சங்கம், பல ஆயிரம் ஆண்டுகளாக — காய்சின வழுதி முதல், முதலாம் கடுங்கோன் வரை 89 பாண்டிய மன்னர்களின் ஆட்சிக் காலம் வரையும் நீடித்து நடைபெற்றது. 4449 தமிழ்ப் புலவர்கள் இச் சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்தார்கள். இறை

★ ★ ★

திரு. கதிர்வேல் தணிகாசலம் அவர்கள் யாழ்ப்பாணம் உடுப்பிட்டியைச் சேர்ந்தவர். அரசபணியிலிருந்து ஓய்வு பெற்ற மூதறிஞர். தமிழ் மொழியிடத்தும், தமிழ் மக்களிடத்தும் மிகுந்த அபிமானம் கொண்டவர். எழுத்தாளர்.

இவர் எழுதிய 'தமிழர் வரலாறும் இடப்பெயர் ஆய்வும்' என்ற நூல் தமிழுலகில் மிகுந்த வரவேற்புப் பெற்றது.

இவர் எழுதிய 'தமிழ் மொழியின் மாட்சியும் பரந்த பண்பாடும்' என்ற புதிய நூல் சமீபத்தில் வெளிவந்திருக்கிறது. அந் நூலிலிருந்து எடுத்துத் தொகுத்த சில பகுதிகளே இக் கட்டுரையில் இடம் பெற்றுள்ளன.

★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்த்த எமது முன்னோர்கள் ★

யனார், முருகன், அகத்தியர் முதலான பெரும் புலவர்களும் இவர்களுள் அடங்குவர்.

பெரியதொரு கடற்கோளினால், குமரிக் கண்டத்தின் பெரும் பகுதி கடலில் மூழ்கி அமிழ்ந்தது. அதனோடு முதற் சங்கமும் மறைந்தது.

இதன் பின், பல காலம் சென்ற பின்பு, இரண்டாவது இடைச் சங்கம் தொடங்கிற்று. முதற் சங்கம் நடைபெற்ற தென்மதுரைக்கு வடக்கே கபாடபுரம் என்ற நகரில் பாண்டிய மன்னர் ஆட்சியைத் தொடங்கிய போது இடைத் தமிழ் சங்கமும் நிறுவப்பட்டது.

இந்த இடைச்சங்கம் 39 பாண்டிய மன்னர்களின் ஆட்சிக் காலமான 3700 ஆண்டு காலம் நடைபெற்றது. அகத்தியர், தொல்காப்பியர், காக்கை பாடினியார் உட்பட 3700 புலவர்கள் இச் சங்கத்தில் இருந்தார்கள்.

இரண்டாவது முறை ஏற்பட்ட கடற்கோளினால் கபாட புரமும் கடல் வாய்ப் பட்டது. இடைச் சங்கமும் மறைந்தது.

இப்போது தமிழ் நாட்டிலுள்ள மதுரை நகருக்குத் தென் கிழக்கில் இருந்த மதுரை என்ற பெரு நகரத்தை மீண்டும் பாண்டிய மன்னர்கள் கட்டியமைத்து ஆட்சியைத் தொடங்கினார்கள். மூன்றாவதான கடைச் சங்கமும் தோன்றியது.

இந்தக் கடைச் சங்கம் 1850 ஆண்டு காலம் நடைபெற்றது. 'நெற்றிக் கண் காட்டினும் குற்றம் குற்றமே' என்று கூறிய நக்கீரர் உள்ளிட்ட 49 பெரும் புலவர்கள் இச் சங்கத்தில் இருந்து தமிழை ஆய்ந்தார்கள். 469 புலவர்களின் நூல்கள் இச்சங்கத்தில் அரங்கேற்றம் செய்யப்பட்டன. உக்கிரப் பெருவழுதி என்ற பாண்டிய மன்னனே இச்சங்க காலத்தின் கடைசி மன்னன்.

பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் தங்கள் மொழியைப் போற்றி வளம் படுத்தி வந்திருக்கிறார்கள். தமிழ் மன்னர்களும் சங்கம் அமைத்து புலவர்களை ஆதரித்து தமிழ் மொழி வளர பேருதவி செய்திருக்கிறார்கள்.

தொல் காப்பியம், திருக்குறள் சங்கப்பாடல்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி மற்றும் கம்பராமாயணம், வில்லி பாரதம், கந்தபுராணம் முதலான பல நூற்றுக் கணக்கான இலக்கியச் செல்வங்களை எமது மூதாதையர் எமக்காக விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

இவ்வளவு சிறந்த இலக்கியச் செல்வங்களையுடைய வளமான தமிழ் மொழிக்கு உலகில் வேறு எந்த மொழியும் ஈடாகாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோடர்கள்

இந்தியாவில் தமிழ் நாட்டின் எல்லையிலுள்ள ஊட்டிப் பக்கத்தில் தோடர்கள் வசிக்கிறார்கள். இந்தியாவின் பழங்குடி மக்களில் இவர்களும் ஒரு இனத்தவர். தங்களை 'அஹ்ல்' (Ahl) என்று சொல்லிக் கொள்வார்கள். இதன் கருத்து 'மக்கள்' என்பதாகும்.

தோடர்கள் சிறு சிறு கிராமங்களில் வாழ்கிறார்கள். கிராமத்தை 'மந்து' என்று சொல்கிறார்கள். தங்களுடைய சிறு வீடுகளை மரத்தினாலேயே கட்டிக் கொள்கிறார்கள்.

இவர்களுடைய குடும்ப வாழ்க்கை வித்தியாசமானது. ஒரு குடும்பத்திலுள்ள ஆண் சகோதரர்கள் எல்லாரும் ஒரே பெண்ணையே திருமணம் செய்து கொள்கிறார்கள். சகோதரர்களில் மூத்தவனே பெண்ணின் சட்ட பூர்வமான கணவனாக இருப்பான். அந்தப் பெண்ணுக்குப் பிறக்கும் எல்லாப் பிள்ளைகளுக்கும் அவனே சட்ட பூர்வமான தந்தையாகவும் இருப்பான். (மகாபாரதக் கதையிலும் திரௌபதி ஐந்து சகோதரர்களைத் திருமணம் செய்ததாகப் படித்திருக்கிறோம்)

தோடர்கள் இடையில் ஒரு துண்டுதான் கட்டியிருப்பார்கள். ஆனால், உடம்பை மூடி, அழகிய வேலைப் பாடமைந்த ஒரு போர்வையை அணிந்திருப்பார்கள். தலை முடியை அடர்த்தியாக வளர்த்திருப்பார்கள்.

கலை நிகழ்ச்சிகளில் இவர்களுக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. தோடவப் பெண்கள் அலங்காரத் தையல் வேலை செய்வதில் பிரபலமானவர்கள். தோடர்கள் மரத்தினால் சிறு தளபாடங்களையும், கலை நயத்துடன் கூடிய கைத்தடிகளையும் செய்கிறார்கள்.

இப்போது தோடர்கள் கல்வி கற்றுப் பல துறைகளிலும் முன்னேறி வருகிறார்கள். தோடவப் பெண்கள் பல கணவர்களை மணக்கும் வழக்கமும் அருகிவிட்டது.

இந்தியப் பழங்குடி மக்களுள் தோடர்கள் மிகுந்த திறமை சாலிகள் என்று சொல்லப்படுகிறது.

---

## மிகவும் சிறிய பறவை

❋ பறவைகளில் மிகவும் சிறிய பறவையே தேன் சிட்டு. இவை மிகவும் அழகானவை. தன் நீண்ட சொண்டால் பூக்களில் உள்ள தேனை இவை குடிக்கும் அழகு தனிதான். இவை வண்ணத்துப் பூச்சி போல பறந்து திரியும், ஆண் பறவையும் சரி, பெண் பறவையும் சரி, இரண்டும் மிக அழகானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கிரேக்க புராண வீரன்' — ஈடிப்பஸ்

★ ★

கிரேக்கத்தில் மிகவும் புகழ் பெற்ற ஒரு புராணவீரன், ஈடிப்பஸ். இவரது வாழ்க்கை விசித்திரமானது. விதியின் விளையாட்டுக்களை அவரது வாழ்க்கையில் பார்க்கலாம். புகழ் பெற்ற கிரேக்க நாடக அவலச்சுவை ஆசிரியர் 'சொபோகிளிஸ்' இவரைப்பற்றி இரண்டு நாடகங்களை எழுதியுள்ளார்.

தீபிஸ் நகர மன்னனான லேயசுக்கும், யொகஸ்ராவிற்கும் பிறந்தவர் ஈடிப்பஸ், ஆனால் ''இவர் பிற்காலத்தில் தன் தந்தையைக் கொன்று தாயை மணப்பான்'' என கிரேக்க தீர்க்க தரிசிகள் கூறியதால் லேயஸ், தன் குழந்தையை ஒரு இடையனிடம் கொடுத்து கொல்லும்படி அனுப்புகிறான். ஆனால் அவன் அக் குழந்தையைக் கொல்லவில்லை. அது இன்னொரு இடையன் மூலம், 'பொலிடஸ்' அரசனிடம் சேர்கிறது. குழந்தைப் பாக்கியம் இல்லாத பொலிபஸ் மன்னர் அக் குழந்தைக்கு 'ஈடிப்பஸ்' எனப் பெயர் இட்டு வளர்க்கிறார்.

ஆனால் அதுவும் நிலைக்கவில்லை. தன்னைப்பற்றி கூறப்பட்ட தீர்க்க தரிசனத்தை எப்படியோ அறிந்து கொண்ட இவர் பொலிபஸே தன் உண்மையான தந்தை என எண்ணி ஊரைவிட்டே ஓடுகிறார்.

விதி யாரைத்தான் விட்டது? பல இடங்களில் அலைந்து இறுதியில் தீபிஸிற்கு வந்தடையும் ஈடிப்பஸ் வரும் வழியில் தகராறு காரணமாக தீபஸ் நகர மன்னன் லேயஸை - தன் தந்தையைக் கொன்று விடுகிறார். அதுமட்டுமல்லாது, தீபிஸ் நகரை பிடித்திருந்த ஒரு தீய சக்தியையும் இவர் அழித்தார். இதனால் தீபிஸ் மன்னனான இவர் கிரேக்க வழக்கப்படி தீபிஸ் ராணியை - தன் தாயை தாயென்று தெரியாமலே திருமணமும் முடித்தார்.

ஆனால் காலப்போக்கில் உண்மை வெளிப்படுகிறது. துக்கம் தாளாத தாய் (மனைவி) யொகஸ்தா தற்கொலை செய்ய ஈடிப்பஸ் அவலத்தின் எல்லைக்கே சென்று தன் கண்களைக் குத்திக் கொள்கிறார். பலராலும் புகழப்பட்ட இந்த 'ஈடிப்பஸ்' பற்றிய நாடகம் பல நாடுகளில் பல மொழிகளில் மேடை யேற்றப்பட்டு வருகிறது. அண்மையில் இந்த நாடகம் யாழ் நகரில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் பிரமாண்டமான முறையில் மேடை யேறியமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# — ஈப்புலி —

அழகாக, கலைநயத்தோடு வலை பின்னும் சிலந்தியைப் பார்த்திருப்பீர்கள். அனேகமான அனைவரது வீடுகளிலும் இது இருக்கும். அந்த சிலந்தியில் ஒரு வகைதான் இந்த 'ஈப்புலி'. இதற்கு இப்பெயர் வந்ததே ஒரு காரணமாகத்தான். இது ஏனைய சிலந்திகளைப் போல வலை பின்னி பூச்சிகளைப் பிடிப்பதில்லை. இதன் முக்கிய உணவு இலையான் (ஈ). ஈயைக் கண்டதும் புலிபோல பதுங்கிப் பதுங்கிச் சென்று பாய்ந்து பிடிக்கும். இதனால் இதற்கு 'ஈப்புலி' என்ற பெயரே நிலைத்துவிட்டது.

இதனால் இது வேட்டையிடும் சிலந்திச் சாதிகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இதன் தலை மார்பின் மேல் அமைந்திருக்கும். முகம் குறுகியதாகவும் செங்குத்தாகவும் இருக்கும். இதன் கண்கள் வரிசையாக அழகாக இருக்கும்.

இவ்வகை சிலந்திகள் பொதுவாக கல்லின் அடியிலேயோ அல்லது வீட்டுச் சுவர்களிலேயோதான் வாழும். இவை தாம் வசிப்பதற்காக தம் உடலில் இருந்து வரும் பட்டு நூலால் அழகாக வலை பின்னும். பின் அதிலேயே பெண் ஈப்புலி தன் முட்டைகளை வைத்துப் பாதுகாக்கும். குஞ்சுகள் பொரித்ததும் அவை தாயின் முதுகில் ஏறி மொய்த்துக் கொண்டிருக்கும்.

இவ்வகை சிலந்தியால் மனிதனுக்கு அவ்வளவு ஆபத்து இல்லை என்று தான் கூற வேண்டும். நாம் எத்தனையோ வகையான பூச்சிகளைப் பார்க்கிறோம். ஆனால் கலை நயத்துடன் தன் வலையைப் பின்னும் சிலந்திகளை நாம் அவ்வளவாக கவனிப்பதில்லை. வீட்டுச் சுவர்களில் அவை பின்னியிருக்கும் வலைகளை கூர்ந்து பார்த்தால் அவற்றில் காணப்படும் நுட்பமும், நேர்த்தியும் எம்மை வியப்பில் ஆழ்த்தும்.

---

## டயானாவின் உயில் !

உலகக் கவனத்தை தன் பக்கம் ஈர்த்த தேவதை டயானா. இவரது மரணத்தைக் கேட்டு உலகமே ஒரு கணம் தன் துடிப்பை இழந்தது. உலகையே கலக்கிய இந்த பிரிட்டிஷ் இளவரசி தான் இதயங்களின் இளவரசி என்பதை மரணத்தின் பின்பும் நிரூபித்துள்ளார். தன் உயிலில் தன்னுடன் பல வருடம் பணியாளராக இருந்தவருக்கு முப்பத்தி மூன்று இலட்சம் ஒதுக்கியுள்ளாராம். அதேபோல் தன் ஆதரவில் வளர்ந்த பதினேழு அனாதைச் சிறுவர்களுக்கும் சொத்தில் உரிமை இருப்பதாக எழுதியுள்ளாராம். சொந்த வாழ்க்கை எப்படியிருந்த போதிலும் அவருடைய இதயத்தில் மனிதாபிமானம் நிறைவாக இருந்ததையே இவை காட்டுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனுகு

'புனுகு' என்பது ஒருவகை வாசனைப் பொருள். ஒரு வகைப் பூனைகளில் இருந்து எடுக்கப்படுகின்றது. ஆச்சரியமாக இருக்கின்றதா? இவ் வகைப் பூனைகள் இந்தியா, தென் கிழக்கு ஆசிய நாடுகள், தென் ஐரோப்பா, ஆபிரிக்கா, மடகஸ்கார் போன்ற நாடுகளில் மட்டுமே வாழ்கின்றன.

இப் பூனைகள் பெரும்பாலும் காடுகளிலேயே வாழ்கின்றன. காட்டுப்பூனைகள் பறவைகள், முட்டைகள், பாம்புகள், தவளைகள், பூச்சிகள், பழங்கள், வேர்கள் இவற்றின் முக்கிய உணவுகள். புனுகு பூனையின் இனவிருத்தி உறுப்புக்கு அருகில் புனுகைச் சுரக்கும் சுரப்பி இருக்கின்றது. இதில் சுரக்கும் புனுகு அதன் அருகில் உள்ள ஒரு பையில் சேர்க்கப்படுகிறது இந்தப் பையிலிருந்துதான் கொம்பினாலான கரண்டி ஒன்றின் உதவியால் புனுகைச் சுரண்டி எடுக்கிறார்கள். புனுகு எடுக்கும் போது அந்தப் பூனையின் பின்னங்கால்களைக் கட்டி விடுகிறார்கள்.

ஒரு மாதத்தில் ஒரு பூனையிடம் இருந்து சுமார் 120 கிராம் புனுகு எடுக்கப்படுகிறது. ஆண் பூனையை விடப் பெண் பூனையே அதிகப் புனுகைத் தருகிறதாம். புனுகுப் பூனையின் இனக்கவர்ச்சிக்குப் புனுகு பயன்படுவதாகத் தெரிய வருகிறது. புனுகைக் கொண்டு ஊது பத்திகள், நறுமணச் சுருட்டுகள் ஆகியவற்றிற்கு வாசனையைச் சேர்க்கிறார்கள். புனுகுக்கு எப்பொழுதுமே ஒரு தனி மதிப்புண்டு.

# தினத்தந்தி

இந்தியாவில் வெளியாகும் எல்லாப் பத்திரிகைகளிலும் மிக அதிகமான வாசகர்களைக் கொண்ட பத்திரிகை என்ற முதல் இடத்தை 'தினத்தந்தி' பெற்று பிரமிக்கத்தக்க சாதனை புரிந்துள்ளது.

'தினத்தந்தி' யை தினம் 82 இலட்சத்து 60 ஆயிரம் வாசகர்கள் படிக்கின்றார்கள்!

அகில இந்திய கணக்கெடுப்பில் இது தெரியவந்தது.

இந்தியாவில் வெளியாகும் ஒவ்வொரு பத்திரிகையையும் எத்தனை வாசகர்கள் படிக்கிறார்கள் என்று ஓ ஆர். ஜி - மார்க் நிறுவனங்கள் கணக்கு எடுத்தன.

பத்திரிகை நிறுவனங்கள், விளம்பரதாரர்கள், விளம்பர நிறுவனங்கள் சார்பில் இந்தக் கணக்கு எடுக்கப்பட்டது.

''தினத்தந்தி'' யை தினமும் 82 இலட்சத்து 60 ஆயிரம் வாசகர்கள் படிக்கிறார்கள் என்றும், இந்தியாவில் வெளியாகும் அனைத்து மொழிப் பத்திரிகைகளிலும் 'தினத்தந்தி' முதலிடத்தை பிடித்துள்ளது என்றும் கணக்கெடுப்பு முடிவில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கணக்கெடுப்பில் முதல் பத்து இடத்தைப் பிடித்துள்ள பத்திரிகைகளில் தமிழ் நாட்டில் வெளியாகும் வேறு எந்தப் பத்திரிகையும் இடம் பெறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொண்டர்

இன்று உலகம் வெகுவாக முன்னேறியுள்ளது. பல புதிய துறைகள், கண்டுபிடிப்புக்கள் இன்னும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. இருப்பினும் எம் மத்தியில் நாகரிகத்தில் சிறிதும் முன்னேறாத ஆதிக்குடியினர் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு பழங்குடியினர்தான் 'கொண்டர்' (Khondas). ஒரிஸா மாநிலத்தைச் சேர்ந்த இவ் ஆதிக்குடிமக்கள் தம்மை 'கூய்' என்றும் கூறிக் கொள்கின்றனர்.

கொண்டர்களில் மலைக் கொண்டர், சமவெளிக் கொண்டர் என இரு வகுப்புக்கள் உண்டு. மலைகளில் வாழ்பவர்கள் மலைக்கொண்டர். இவர்களிடம் ஆதிக்குடிகளின் பழக்கங்கள் அதிகம் காணப்படும். சமவெளிக் கொண்டர்கள் சற்று முன்னேறியவர்கள். இவர்களில் இந்து மத அம்சங்கள் அதிகம் காணப்படும். சமவெளிக் கொண்டர்களில் ராஜகொண்டர்கள் உயர்ந்தவர்களாக கருதப்படுபவர் அரச குடும்பம் போல .

கொண்டர்கள் பெரும்பாலும்காட்டுப்பகுதியிலேயே வாழ்வார்கள். இவர்களில் ஆண்கள் அதிகம் துணி உடுத்துவதில்லை. பெண்கள் இடையில் ஒரு நிறத்துணியும், மார்பைச் சுற்றி மற்றொரு நிறத்துணியும் அணிகிறார்கள். பெண்கள் பளபளப்பான பல நிற அணிகளை அணிவதில் அதிக ஆர்வம் உடையவர். தங்கள் முகத்தில் செங்குத்தாகவும் இடைக் கோடாகவும் பச்சை குத்திக் கொள்வர்.

இக் கொண்டர்களிடம் தூய்மையான உள்ளம் உண்டு. உண்மையையே பேசுவர். பொய் பேசினாலும் விரைவில் அகப்பட்டுக் கொள்வர். வெகுளிகள். பாவம். இவர்கள் இப்படி இருப்பதே மேல்! ஏனெனில் பொய்யும், வஞ்சகமும் நிறைந்த நாகரிக உலகத்திற்கு இவர்கள் வந்தால் என்ன ஆவார்களோ!

கலைகளில் அதிக ஈடுபாடு கொண்ட இவர்கள், இப்போது கல்வியில் சற்று முன்னேற்றம் அடைந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. O

---

❋ ரோமாபுரியில் முற்காலத்தில் மக்கள் தங்கள் வீடுகளில் கலண்டர்கள் மாட்டுவதில்லை. ஒவ்வொரு மாத முதல் நாளிலும் ஊர் கட்டியக்காரன் ஒருவன் வந்து புதுமாதப் பிறப்பைக் கூவிச்செல்வான். உரோம மொழியில் "கலேர்" என்றால் கூவுதல் என்பது பொருள். இந்தக் 'கலேர்' என்ற வார்த்தையிலிருந்துதான் 'கலண்டர்' என்ற சொல் பிறந்தது.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவேறு கழுதை

சிலருக்கு யார் மீதாவது வெறுப்பேற்படும் போது "சீ, கழுதை!" என்று ஏசுவார்கள். இன்னும் சற்றுத் தாக்கமாக ஏசும் போது "கோவேறு கழுதை" என்று திட்டுவார்கள்.

இந்தக் கோவேறு கழுதைகளை பொதுவாக நமது நாட்டில் காண முடிவதில்லை.

உயிரினங்களில் இது ஒரு வித்தியாசமான விசித்திர பிராணி.

பொதுவாக எல்லா உயிரினங்களும் - மனிதர்கள் உட்பட - அந்த இனத்திலுள்ள ஒரு ஆணும் ஒரு பெண்ணும் உடலுறவு கொள்வதால் தமது இனத்தை விருத்தி செய்கின்றன.

ஆனால் இந்தக் கோவேறு கழுதை இனம் மட்டும் இதற்கு விதி விலக்கானது. ஒரு ஆண் கோவேறு கழுதையும் ஒரு பெண் கோவேறு கழுதையும் உடலுறவு கொள்வதால், கோவேறு கழுதைக் குட்டி பிறப்பதில்லை.

ஒரு ஆண் குதிரையும் பெண் கழுதையும் உடலுறவு கொள்வதால் கோவேறு கழுதைக் குட்டி பிறக்கிறது. அது போலவே ஒரு ஆண் கழுதையும் பெண் குதிரையும் உடலுறவு கொண்டாலும் கோவேறு கழுதைக்குட்டி பிறக்கிறது.

இவற்றில் ஆண் கழுதை பெண் குதிரையுடன் கூடுவதால் பிறக்கும் கோவேறு கழுதையினம் சிறப்பானது.

கோவேறு கழுதையின் தோற்றமும் குணமும் குதிரை - கழுதை இரண்டினதும் அம்சங்கள் பொருந்தியதாக இருக்கின்றன.

மிக ஆதிகாலத்திலிருந்தே கோவேறு கழுதைகள் பாரம் தூக்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. முக்கியமாகப் போர்க்காலங்களில் மலைப்பாங்கான பிரதேசங்களில் ஆயுதங்களையும் பிற பொருட்களையும் சுமந்து செல்வதற்குக் கோவேறு கழுதைகள் மிக உதவியாக இருக்கின்றன.

---

சில ஆண்டுக்கு முன்பு தமிழ் மொழியில் சில எழுத்து வடிவங்கள் மாற்றம் பெற்றுள்ளன. முன்பு ஸெ, ஹெ, ஸெ, என்று எழுதியவற்றை இப்போது லை, ளை, னை, என்று எழுதுவது வழக்கமாகி விட்டது. பெரியார் ஈ. வே. ரா. பல ஆண்டுகளுக்கு முன்பே இப்படியான எழுத்துச் சீர்திருத்தல்களைச் செய்திருக்கிறார். 'ஐ' என்பதை அவர் 'அய்' என்றே எழுதினர். (உ-ம் ஐயர் அய்யர்) O



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமானுஜன் (1887 - 1920)

★ ★ ★ ★ ★

மிகப் பழங்காலத்திலேயே இந்தியாவில் கணிதத்தில் வல்லவர்கள் பலர் இருந்தனர். அரியபட்டரும் வராகமிகிரரும் 1,500 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் வாழ்ந்தார்கள். இவர்கள் கணிதத்திலும் வானவியலிலும் பல உண்மைகளைக் கண்டு பிடித்தார்கள். இவர்களைப் போன்ற ஒரு பெரிய கணித அறிஞர் இராமானுஜன். அண்மையில் 80 ஆண்டுகளுக்கு முன்பு பிறந்தவர். இவர் பிறந்த ஊர் ஈரோடு; இவர் கல்வி பயின்றது கும்பகோணத்தில். பள்ளியில் பயிலும் போதே இவர் கணிதத்தில் வல்லவராக விளங்கினார். ஆனால் கணிதத்தில் இருந்த ஊக்கத்தினால் பிற பாடங்களில் இவர் அதிக கவனம் செலுத்தவில்லை. அதனால் இவருக்கு பல்கலைக் கழகப் பட்டம் கிடைக்கவில்லை.

இராமானுஜன் சென்னைத் துறைமுக அலுவலகத்தில் ஒரு சிறு பணியில் அமர்ந்தார். ஆனால் இவருடைய நோக்கம் முழுவதும் கணித ஆராய்ச்சியிலேயே ஈடுபட்டிருந்தது. இவருடைய ஆராய்ச்சிகளுக்கு சென்னைப் பல்கலைக் கழகம் உதவி செய்தது. இராமானுஜன் தம்முடைய ஆராய்ச்சிகளைப் பற்றி கட்டுரைகள் பல எழுதி வெளியிட்டார். இவருடைய ஆராய்ச்சிகளின் பெருமை இங்கிலாந்துக்கும் எட்டிற்று. ஹார்டி என்ற கணிதப் பேராசிரியர் இராமானுஜனை இங்கிலாந்துக்கு வரும்படி அழைத்தார். அதற்கிணங்க இராமானுஜன் 1914 இல் இங்கிலாந்துக்குச் சென்றார். அங்குள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம் இவருடைய ஆராய்ச்சிகளுக்கு ஊக்கம் அளித்தது. இவருடைய கணித அறிவை பாராட்டி இங்கிலாந்திலுள்ள ராயல் கழகம் இவரை ஓர் உறுப்பினராகச் சேர்த்துக் கொண்டது. இப்பெருமையைப் பெற்ற முதல் இந்தியர் இராமானுஜன் ஆவார். இங்கிலாந்தில் இருந்த பொழுது இவருக்குக் கொடிய நோய் கண்டது. அதனால் 1919 - ல் இவர் இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். ஆனால் அடுத்த ஆண்டிலேயே இவர் காலமானார்.

இவரது நினைவாக 'இராமானுஜன் கணித ஆராய்ச்சி நிலையம்' என்ற நிறுவனம் சென்னையில் இயங்கி வருகிறது. ○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ஜென்டினா

தென் அமெரிக்காவின் தென் கிழக்கில் அமைந்துள்ள ஆர்ஜென்டினா, வடக்கே பொலிவியா, பராகுவே மற்றும் உருகுவேயையும் மேற்கே சிலியையும் எல்லையாகக் கொண்டது. "பியூனஸ் ஏர்ஸ்" ஐத் தலைநகராகக் கொண்டுள்ள இதன் பரப்பு ஏறத்தாழ 27,66,654 ச. கி. மீ ஆகும். இங்கு தனிநபர் வருமானம் 2134 டாலர்கள். அர்ஜென்டினாவில் நாணயம் 'பெஸோ' எனக் கூறப்படுகிறது.

ஸ்பெயினிடம் அடிமையாய் இருந்த அர்ஜென்டினா 1816ல் சுதந்திரம் அடைந்தது. தென் அமெரிக்காவின் தென் முனையில் அமைந்துள்ள இந்நாட்டில் நிலக்கரி, ஈயம், செப்பு, தங்கம் போன்ற கனிப்பொருட்கள் கிடைக்கின்றன. ஆயினும் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நாடாகவும் இது காணப்படுகிறது.

# அன்டோரா

இப்பெயர் நீங்கள் கேட்டறியாத ஒரு பெயராக இருக்கலாம். 'அன்டோரே-லா-வில்லே'யைத் தலைநகராகக் கொண்ட அன்டோரா பிரான்சுக்கும், ஸ்பெயினுக்கும் இடையில் அமைந்துள்ள ஒரு தென் மேற்கு ஐரோப்பிய நாடாகும். 464 ச. கி. மீ பரப்புக் கொண்ட அன்டோராவில், காத்தலான், ஸ்பானிஷ், பிரேஞ் போன்ற மொழிகள் வழங்கப்படுகின்றன.

இங்கு ஆட்சி சற்று வித்தியாசமானது. தேர்ந்தெடுக்கப் பட்ட 28 உறுப்பினர் கொண்ட கவுன்சில் வழி ஆட்சி நடைபெறுகின்றது. 1993இல் இதற்கென தனிச்சட்டம் வகுக்கப்பட்டதோடு ஐ.நாவின் 184 வது உறுப்பினராகவும் இணைந்தது. பெயரளவில் தான் இது பிரான்சின் சர்வாதிகாரத்திற்கும் ஸ்பெயினின் அதிகாரத்திற்கும் உட்பட்டது.

இங்கு தானியங்கள், உருளைக்கிழங்கு புகையிலை போன்றவை முக்கிய விளைபொருட்கள். கட்டுப்பாடு இல்லா வாணிபம் கொண்ட இங்கு சுற்றுலா முக்கிய வருமான மூலமாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன பொருத்தம்!

தற்செயலான நிகழ்வுகளாக இருந்தாலும், அவற்றின் அசாதாரண ஒற்றுமை வியப்பூட்டுபவையாக இருக்கும்.

நாடகங்களில் நிகழும் படுகொலைகளைப் போன்ற சோக நிகழ்வு அமெரிக்க ஜனாதிபதிகளாய்ப் புகழ்பெற்ற ஆபிரகாம் லிங்கன் மற்றும் ஜான்பிட்ஸ், ஜெரால்ட் கென்னடி இவர்களுக்கும் நேர்ந்தது. இவர்கள் வாழ்வில் காணப்படும் ஒற்றுமை நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தும்.

1. லிங்கன் 1860 ல் அமெரிக்க ஜனாதிபதியானார்.
   கென்னடி 1960 ல் அமெரிக்க ஜனாதிபதியானார்.
   (இடைவெளி 100 ஆண்டுகள்)

2. லிங்கனைக் கொன்ற ஜான்பூத 1839 ல் பிறந்தவன்.
   கென்னடியைக் கொன்ற ஆஸ்வால்ட் 1938 ல் பிறந்தவன்.
   (ஏறத்தாழ 100 ஆண்டுகள்)

3. லிங்கனைத் தொடர்ந்து ஜனாதிபதியான ஆண்ட்ரு ஜான்சன் 1808 ல் பிறந்தவர்.
   கென்னடியைத் தொடர்ந்து ஜனாதிபதியான லிண்டான் ஜான்சன் 1908 ல் பிறந்தவர். (இடைவெளி 100 ஆண்டுகள்)

4. இருவருக்குப்பின்னும் துணை ஜனாதிபதிகளாயிருந்த ஜான்சன் என்ற பெயருடையவர்களே ஜனாதிபதிகளாயினர்.

5. இருவரும் நீக்ரோக்களின் குடியுரிமையில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள்.

6. இருவரும் ஒரு வெள்ளிக்கிழமையில் தத்தம் மனைவியரின் கண்ணெதிரே படுகொலை செய்யப்பட்டனர்.

7. இருவரும் வெள்ளை மாளிகையில் வசிக்கும் பொழுது ஒரு புதல்வனை இழந்துள்ளனர்.

8. இருவருமே பின்மண்டையில் துளைத்த ஒரு குண்டால் உயிர் துறந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்ய இலக்கியத்தின் பிதாமகன்

# 'அலெக்ஸாண்டர் புஷ்கின்'

ரஷ்ய இலக்கியத்தின் மகா உன்னதமான நுழைவாயிலாக இருந்து அந்த இலக்கியத்தின் கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் என்ற அனைத்திற்கும் மூலபிதாவாக, யதார்த்த பூர்வமான ஜனநாயக இலக்கியக் கண்ணோட்டத்திற்கு வித்திட்டவர் அலெக்ஸாண்டர் புஷ்கின். இதனால் இவர் ரஷ்ய இலக்கியத்தின் பிதாமகனாகப் போற்றப்படுகின்றார்.

1799 ம் ஆண்டு ஜூன் மாதம் 6 ம் திகதி மாஸ்கோ (Mosco) வில் ஒரு உயர் குடும்பத்தில் பிறந்த புஷ்கின், கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே இலக்கியங்களை எழுத ஆரம்பித்துவிட்டார். உயர்ந்த பதவிகளில் இருந்தவர்களை நையாண்டி செய்தார். தமக்கே உரிய எளிய நடையில் பலரைக் கேலிசெய்தார். அவரது கவிதைகள் அவர் கற்ற கல்லூரியில் பிரபல்யம் அடைந்தன. அதனால் அவர் அங்கு படிக்கும் பொழுதே, புஷ்கின் தான் ரஷ்ய இலக்கியத்தின் வருங்கால நம்பிக்கை என்ற எண்ணம் ஏற்பட்டுவிட்டது. அலக்ஸாண்டர் புஷ்கினின் முதல் கவிதை நூல் 'ருஸ்லானும் லுட்மிலாரும்' – இது அக்காலத்தில் எல்லோராலும் பேசப்பட்ட ஒரு நூலாக இருந்தது.

புஷ்கினின் வாழ்வு வறுமை நிறைந்தது. அவரது திருமண வாழ்வில் துன்பமும் அமைதியின்மையும் நிலவியது. ஆனால் தனது துன்பங்கள் தொல்லைகளின் மத்தியிலும் புஷ்கின் தனது தாய்மொழிக்கு ஒரு அற்புதமான மாளிகையைக் கட்டினார். தன் இலக்கிய வாழ்வை சிறப்பாகவே நிறைவேற்றினார், தனக்கு ஏற்பட்ட சவால்களை எதிர்கொண்டு எதிர் நீச்சல் போட்டார். அந்த முயற்சியால்தான் அவரது இலக்கியங்களைப் படிப்பவர் நாவில் எல்லாம் அவரது பெயர் வழங்கி வருகிறது. ருஷ்ய இலகியத்தின் பிதா மகன் என்ற மாபெரும் பெருமையும் அவருக்குக் கிடைத்தது.

---

'சமாகமம்' என்ற சொல் சேர்ந்திருப்பது என்று பொருள் படும். வான வெளியிலுள்ள கோள்கள், தங்களுக்குள்ளோ அல்லது ஏதாவது ஒரு நட்சத்திரத்திற்கோ மிக அருகிலிருப்பது போல் தோன்றுவதை அதாவது அவை பூமியுடன் ஒரே நேர்கோட்டிலோ அல்லது சிறிது விலகியோ அமைவதை 'சமாகமம்' என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கு

சங்கை எல்லோரும் பார்த்திருப்பீர்கள். இந்து ஆலயங்களில் அதை வாத்தியமாக ஊதுவார்கள்.

வட இந்தியாவிலுள்ள வங்காளம், அசாம், பீகார், ஒரிசா முதலிய இடங்களில் வசிக்கும் பெண்களும் வேறு பல பழங்குடி இனப் பெண்களும் சங்கு வளையல்களையும் சங்கிலிருந்து செய்த பிற ஆபரணங்களையும் அணிகிறார்கள். இந்து ஆலயங்களில் கட்டிட வேலைக்கும் வெள்ளை அடிப்பதற்கும் சங்கினால் செய்த சுண்ணாம்பை உபயோகிக்கின்றனர். சங்கு ஒரு மென்மையான பிராணி, நத்தை இனத்தைச் சேர்ந்தது. அது வசிக்கும் கூட்டையே நாங்கள் சங்கு என்று சொல்லுகிறோம்.

சங்கின் முகப்பில் வளையமாக வரைகள் இருக்கும். இந்த வரைகள் இடப்பக்கமாக சுற்றியிருந்தால் அது சாதாரண சங்கு. - இடம்புரி சங்கு. இந்த வரைகள் வலப்பக்கம் சுற்றியிருந்தால் அது வலம்புரிச் சங்கு. இந்த வலம்புரிச் சங்கு மிக அருமையாகவே கிடைப்பதால் மிகவும் விலை உயர்ந்தது. வலம்புரிச் சங்கை வைத்திருப்பவர் வீட்டில் செல்வம் பெருகும் என்ற மூட நம்பிக்கை உண்டு. அதனால் பெரிய செல்வர்கள் வலம்புரிச் சங்குகளைப் போட்டி போட்டுக் கொண்டு அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள்.

ஆயிரம் இடம்புரிச் சங்கு சூழ ஒரு வலம்புரிச் சங்கு இருக்குமென்றும், ஆயிரம் வலம்புரிச் சங்குகள் சூழ ஒரு பாஞ்ச சன்னியச் சங்கு இருக்குமென்றும், ஒரு ஐதீகம் உண்டு. இந்துக் கடவுளாகிய திருமாலின் கையிலிருப்பது பாஞ்ச சன்னியச் சங்கு என்றே புராணங்கள் கூறும்.

சங்குகள் மணற்பாங்கான அல்லது மணலும் சேறும் கலந்த கடற் பகுதிகளில் அதிகமாக வாழும். தென்னிந்தியாவின் சில கடற்பரப்பிலும், யாழ்ப்பாணத்திலுள்ள தீவுப்பகுதி கடல்களிலும் சங்குகள் நிறையக் காணப்படுகின்றன.

சங்கு ஓட்டின்மீது மெல்லிய மஞ்சள் நிறமான தோல் மூடியிருக்கும். இதன் கீழுள்ள ஓடு வெள்ளை வெளேரென்று அழகாகவும் தடிப்பாகவும் கடினமாகவும் இருக்கும்.

பெண்சங்கு தனது முட்டைகளை ஒரு வித உறைகளில் இடும். இந்த உறைகள் முறுகிக் கொண்டு செம்மறி ஆட்டின் கொம்பு போலத் தோற்றமளிக்கும். ஒவ்வொரு உறையிலும் பல அறைகள் இருக்கும். ஒவ்வொரு அறையிலும் பல முட்டைகள் இருக்கும். இந்த முட்டை உறைகளைப் 'சங்குப் பூ' என்று சொல்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை நாயக்கன்

மதுரையை ஆண்ட புகழ்மிக்க மன்னன் திருமலை நாயக்கன். இவன் கோயிற் திருப்பணிகள் பல செய்தவன். அறம் மிக்க ஆட்சி மட்டுமல்ல, இறைபக்தியுமே வாழ்வின் ஊன்று கோல்கள் என எண்ணி இறைபணியை செய்தான். இவன் 96 கோயில்களை – பிரார்த்தனைப்படி — கட்டி முடித்தான் என நாயக்கர் சரித்திரம் கூறுகின்றது. அதையொட்டிய ஒரு சுவாரசியமான சம்பவமும் கூறப்படுகின்றது.

மன்னனுக்கு ஒரு முறை கடுமையான ஜலதோஷம் பிடித்துவிட்டதாம். பார்க்காத மருத்துவர்களும் இல்லை; போடாத மருந்துகளும் இல்லை! எத்தனையோ பெரிய பெரிய மருத்துவர்களும் கூட அதைக் குணப்படுத்த முடியவில்லை.

இறைபக்தி கொண்ட மன்னன் மீனாட்சியம்மையே இனித் துணை என ஐயமற உணர்ந்துகொண்டான். அதன்படி தன் ஜலதோசத்தை நிவர்த்தி செய்யும்படியும் எத்தனை நாளைக்குள் அது குணமாகிறதோ அத்தனை எண்ணிக்கையான கோயில்களைக் கட்டுவதாக பிரார்த்தனை செய்தான்.

அவ்வாறு வேண்டிக் கொண்ட 96ம் நாள் ஜலதோஷம் நின்றது. பிரார்த்தனைப்படி 96 கோவில்களைக் கட்டி முடித்தான் திருமலை நாயக்கன்.

# பிரமாண்டமான வான வெளி

நமது பூமியும் பிற கோள்களும் சூரியனைச் சுற்றி வருவது எமக்குத் தெரியும். இந்தச் சூரிய மண்டலத்தை 'கலெக்சி' என்று சொல்கிறார்கள்.

சூரியனும் ஒரு நட்சத்திரமே. அதனால் இதை நட்சத்திர மண்டலம் என்றும் குறிப்பிடுவார்கள்.

இருபது நட்சத்திர மண்டலங்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒரு குறிப்பிட்ட இயக்கத்தில் இயங்குவதாக வானிலை அறிஞர்கள் கூறுகிறார்கள்.

ஒரு நட்சத்திர மண்டலத்தையே எம்மால் கற்பனை செய்தும் பார்க்க முடியவில்லை, இருபது நட்சத்திரங்கள் ஒன்று சேர்ந்தால் அதன் பரிமாணம் — நினைத்தும் பார்க்க முடியாததாயிருக்கிறது!

இரவில் வானம் நிறைய நட்சத்திரங்களைப் பார்க்கின்றோமல்லவா? அந்த நட்சத்திரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சூரியனே அந்த ஒவ்வொரு சூரியனைச் சுற்றியும் பூமியைப்போன்ற சில கோள்களாவது இருக்கும். அவை ஒவ்வொன்றும் ஒரு நட்சத்திர மண்டலம்! தலைசுற்றுகிறதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டகச் சிவிங்கி

ஒட்டகச் சிவிங்கி பற்றி கேள்விப் பட்டிருப்பீர்கள். எல்லாப் பிராணிகளிலும் மிகவும் உயரமானது இதுதான். தன் கழுத்தை கம்பீரமாக நீட்டி இது நடப்பதே ஒரு தனி அழகுதான்.

இது ஒட்டகம் போல உயரமாகவும், சிவிங்கி போல புள்ளிகள் உள்ளதாகவும் இருப்பதால் இரு மிருகங்களின் பெயர்களும் இணைந்து ஒட்டகச் சிவிங்கி என்ற பெயர் வழங்கலாயிற்று.

இவற்றின் கால்கள் சற்று வித்தியாசமானவை. பின்னங்கால் சோடிகளை விட, முன்னங்கால் சோடிகள் உயரமானவை. இவை தம் நீண்ட கழுத்தின் உதவியால் உயரத்தில் உள்ள மர இலைகளையும் பற்றித் தின்கின்றன. நீண்ட நாட்களுக்கு நீரருந்தாமலும் இவை வாழ முடியும்.

ஒட்டகச் சிவிங்கி சாதுவாக யாருக்கும் தீங்கு செய்யாமல் இருக்கும். ஆனால் யாரும் பிடிக்க வந்தால் தன் பின்னங்கால்களால் அவர்களை எதிர்க்கும். இது சிங்கத்துடன் கூட போராடும் மனோபலம் உள்ளது. இது தனித்துக் காணப்படுவதில்லை. தன் கூட்டத்துடனேயே காணப்படும். ஒட்டகச் சிவிங்கிக்கு இந்தப் பெரிய கழுத்து இருந்தாலும் குரல் கிடையாது என்பதுதான் வியப்பான விடயம்.

தோலுக்காக இவை வேட்டையாடப் படுவதால் இவற்றின் தொகை குறைந்து வருகிறது. 'ஜிராபாகா மலோபார் டாவிஸ்' என்ற விஞ்ஞானப் பெயரை உடைய ஒட்டகச் சிவிங்கிகள் இப்போது ஆபிரிக்காவில் மட்டுமே காணப்படுகின்றன.

இனி யாராவது 'ஒட்டகச் சிவிங்கி போல் வளர்ந்தது தான் மிச்சம்' என்று ஏசினால் கால்களால் உதைக்க வேண்டியதுதான்!

---

## ஐயம் திரிபற

ஒருவருடைய கல்விச் சிறப்பைப் பற்றிக் கூறும்போது 'அவர் பல நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றவர்' என்று குறிப்பிடுகிறார்கள்.

'ஐயம் திரிபற' என்றால் என்ன?

மங்கிய வெளிச்சத்திலே பாதையில் கிடந்த ஒரு கயிற்றைக் கண்டு 'இது கயிறோ அல்லது பாம்போ' என்று நினைப்பது ஐயம். (சந்தேகம்).

அந்த கயிற்றைப் பார்த்து, 'ஐயோ, இது பாம்புதான்!' என்று பதறுவது திரிபு, (ஒன்றை இன்னொன்றாக நினைத்தல்)

ஐயமும் திரிபும் இல்லாமல் ஒரு பொருளை தெளிவாக, சரியாக அறிதலையே 'ஐயந்திரிபற அறிதல்' என்று குறிப்பிடுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தன மரம் ★ ★

கோயில்களுக்கோ, மங்கள விழாக்களுக்கோ சென்றால் அங்கே எம்மை வரவேற்பது சந்தனம். மங்களப் பொருட்களில் ஒன்றாகக் கருதப்படும் சந்தனமரம் இந்தியாவிலேயே வளர்கின்றது. தென்னிந்தியாவில் மைசூர், குடகு, கோயம்புத்தூர், சேலம் ஆகிய பிரதேசங்களில் மட்டுமே இது வளர்கிறது.

குறிப்பிடத்தக்களவு பரிமாணம் கொண்ட சந்தன மரத்தைக் கொண்டு சிறு பெட்டிகள், கைத்தடிகள், பேனாக் கட்டைகள் போன்ற வேலைப் பாடமைந்த பல பொருட்கள் செய்யப்படுகின்றன. இன்று அனேக மதத்தவர்களின் சமயச் சடங்குகளிலும் சந்தனக் கட்டை தவறாமல் இடம் பெற்றிருக்கின்றது.

இந்திய வணிகத்தில் பெரும் உதவியாக இருப்பது சந்தனக் கட்டை ஏற்றுமதிதான். ஓர் ஆண்டிற்கு சராசரியாக 2750 தொன் சந்தனக் கட்டை உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியப் பாவனை போக எஞ்சியவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சந்தனக் கட்டையில் இருந்து சந்தன எண்ணெயும் எடுக்கப்படுகின்றது.

ஒரு பெரிய மண்பானையில் சந்தனக் கட்டைத் துண்டுகளைப் போட்டு அளவாக நீர் வார்த்து பானையை மூடுவர். பின் பானையிலிருந்து ஒரு குழாயை பொருத்தி ஒரு செப்புக் கலத்துடன் இணைத்து விடுகிறார்கள். பானையை சூடேற்றியதும் எண்ணெய் பிரிந்து நீராவியுடன் குழாய் மூலம் கலத்தைச் சென்றடைகிறது. இவ்வாறு பல நாட்கள் தொடர்ந்து பானையை சூடேற்றி எண்ணெயைப் பிரித்தெடுப்பார்கள்.

இவ்வாறு தயாரிக்கப்படும் சந்தன எண்ணெய்க்கு சந்தனக்கட்டையைவிட கிராக்கி அதிகம். எவ்வாறாக இருந்தாலும் சந்தன மரம் இந்தியாவிற்கு கிடைத்த ஒரு வரம் என்று தான் கூறவேண்டும்.

என்ன, சந்தன மரக் கடத்தல் வீரப்பன் நினைவு வந்துவிட்டதா!

---

## மயில்

★ இந்தியாவின் தேசிய பறவையான மயில் பறவைகளிலேயே அழகானது. ஆண்மயிலின் இறகுகள் ஒன்றன் மேல் ஒன்றாகச் சேர்ந்து சுமார் ஆறடி நீளத்திற்கு இருக்கும்.

மயிலின் சராசரி வயது 25 வருடங்கள்தான். அதற்குள் அது பல முறை இறகுகளை உதிர்த்து விட்டு புதிய இறகுகளைப் பெறுகின்றது. மயிலின் இறகுகள் பொதுவாக கோடை காலத்தில் உதிர்ந்து குளிர் காலத்தில் வளர ஆரம்பிக்கும். ஒவ்வொரு மயிலிறகிலும் ஓவியர் வரைந்தது போன்ற அழகிய கண்கள் இருப்பதால் இதற்கு 'ஆயிரம் கண் பறவை' என்ற பெயரும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐஸ்லாந்து

இது அட்லாண்டிக் சமுத்திரத்தின் வட பகுதியில் உள்ள ஒரு சுதந்திரக் குடியரசு நாடு. இது மலைகள் நிறைந்த ஒரு தீவு. 1'3, 400 சதுர கிலோ மீட்டர் பரப்பு உள்ளது. இங்கு பனியும் குளிரும் அதிகம். மலை மீது எப்போதும் பனி உறைந்து கிடக்கும். ஆனால் ஒரு வியப்பு என்ன தெரியுமா? இங்கு வெந்நீர் ஊற்றுக்கள் பல உண்டு! எரிமலைகள் இந்நாட்டில் இருப்பதே இதற்குக் காரணம். இந்த ஊற்றுக்களிலிருந்து கிடைக்கும் வெந்நீரை இந்நாட்டு மக்கள் குளிக்கவும் சமைக்கவும் பயன்படுத்துகின்றனர். இத்தீவில் இன்னொரு அதிசயமும் உண்டு. இது ஆர்க்டிக் வட்டத்தை அடுத்திருப்பதால் இங்கு கோடையில் நாள் முழுவதும் பகலாக இருக்கும்; குளிர்காலத்தில் நாள் முழுவதும் இரவாக இருக்கும்.

தீவின் வட பகுதியில் குளிர் அதிகம். மத்திய பாகம் ஒரு பீடபூமி. எனவே தென் பகுதியிலும், தென் மேற்குப் பகுதியிலுந்தான் மக்கள் வாழ்கிறார்கள். இந் நாட்டு மக்களில் பெரும்பாலோர் டென்மார்க், சுவீடன், நோர்வே ஆகிய நாடுகளிலிருந்து வந்து குடியேறியவர்கள். மக்கள் தொகை சுமார் இரண்டு லட்சம்.

கோடை காலம் குறுகியதாக இருப்பதால் கோதுமை போன்ற தானியங்கள் விளைவதில்லை. பெரு முயற்சியால் பயிராக்கப்பட்ட சிறு செடிகளைத் தவிர வேறு மரங்களே இல்லை. உருளைக் கிழங்கு பயிராகின்றது. ஆடு, மாடு, குதிரைகள் வளர்ப்பதும் மீன் பிடித்தலும் இங்கு நடைபெறும் முக்கிய தொழில்கள். இங்கு பல மாதங்கள் பனிக்கட்டி உறைந்து கிடப்பதால் பெரிய மரங்கள் வளர்வதில்லை. இதனால் எங்கும் கல் வீடுகளையே காணலாம். இத்தீவில் ரயில் பாதை இல்லை. மக்கள் பெரும்பாலும் குதிரைகளில் தான் பயணம் செய்கின்றனர். காய்கறிகள், பழங்கள், நிலக்கரி, மரம் முதலியன வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதியாகின்றன. மக்கள் எல்லோரும் படித்தவர்கள். பள்ளிக்கு வர முடியாத குழந்தைகளுக்கு அவர்கள் இருப்பிடத்திற்கே சென்று ஆசிரியர்கள் கல்வி கற்பிப்பார்கள்.

ரேக்யவிக் ஐஸ்லாந்தின் தலை நகரம். பெரிய பட்டினமும் துறைமுகப்பட்டினமும் இது தான்.

---

அமெரிக்காவின் கிராமம் ஒன்றில் ஒரு குடியானவனின் வீட்டில் திருடர்கள் நள்ளிரவில் புகுந்து திருடிக்கொண்டிருந்தார்கள். தற்செயலாகக் கண் விழித்த குடியானவன் வீட்டுக்குள் நடப்பதை அறிந்து கொண்டதும் மெதுவாக வெளியே வந்து, அங்கே நின்ற திருடர்களின் மோட்டாரை எடுத்துக் கொண்டு பறந்து விட்டான். அவனது வீட்டுக்குள் இருந்த பொருள்களை விட, மோட்டாரின் பெறுமதி பல மடங்கு அதிகம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப் பிரதமர் வாஜ்பாயி




சரளமாக வரும் வார்த்தைகளும், பொருத்தமான ஏற்ற இறக்கங்களும், சுவாரஸ்யமில்லாத விஷயங்களைக் கூட ரசிக்க வைக்கும் ஜாலமும், அபாரமான நகைச்சுவை உணர்வும் வாஜ்பாயியை இந்திய அரசியலில் ஒரு கவர்ச்சி நட்சத்திரமாக ஆக்கி வைத்திருக்கின்றன.

சென்ற பெப்ரவரியில் நடைபெற்ற இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் வெறுமனே ஒரு ஆசனத்தைக் கைப்பற்றுவதற்காக இவர் போட்டியிடவில்லை.

பிரதமர் பதவியைப் பிடிப்பதற்காகத்தான் களத்தில் இறங்கினார்.

பாரதிய ஜனதா கட்சி 'இதோ இவர் தான் அடுத்த பிரதமர்' என்ற கோஷத்துடன்தான் இவரை தேர்தல் களத்தில் இறக்கியது.

கட்சியின் எதிர்பார்ப்பு பொய்க்கவில்லை.

வெற்றிக் கனியைப் பறித்து பிரதமர் பதவியையும் பிடித்து விட்டார். வாஜ்பாயி!

இந்தியப் பிரதமர் பதவி இவரது கைக்கு வந்திருப்பது இது இரண்டாவது தடவை.

இதற்கு முன் பதின் மூன்றே நாட்கள் பிரதமராக இருந்த அனுபவம் இவருக்கு உண்டு.

பாரதிய ஜனதாக் கட்சி 'இந்து தீவிரவாதம்' பேசுகிற கட்சி; ஆனாலும் இந்தக் கட்சியில் உள்ள மிதவாதிகளுள் இவர் முக்கியமானவர்.

இந்து மரபு குறித்த பெருமிதத்தை ஆவேசமாகத் தட்டி எழுப்புவதில் கெட்டிக்காரரான இவர் 'ராம ஜன்ம பூமி' விஷயத்தில் அதிக அக்கறை இல்லாதவராகக் கட்சி வட்டாரங்களில் கருதப்படுகிறார்.

பொருளாதாரக் கொள்கையிலும் இவரிடம் ஒரு தனித்துவம் உண்டு. உலக மயமாக்கல், திறந்த பொருளாதாரம் என்ற கொள்கைகளை இவர் ஏற்றுக் கொண்ட போதிலும் 'சுதேசி' யத்துக்கு முட்டுக்கட்டை போடாத விதத்தில் அவை இருக்க வேண்டும் என்பதில் இவர் குறியாக இருக்கிறார்.

இந்திய வரலாற்றிலேயே காங்கிரஸ் பாரம்பரியத்திலிருந்து வராத முதலாவது பிரதமர் என்ற பெருமையும் இவருக்கு உண்டு.

தனது பதினாறாவது வயதிலேயே ஆர். எஸ். எஸ். இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றியவர் இவர்.

ஆர். எஸ். எஸ். இயக்கம் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது வெள்ளைக்காரர்களுடன் அனுசரித்துப் போகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கையே கடைப்பிடித்து வந்தது.

1942ல் நடைபெற்ற 'வெள்ளையனே வெளியேறு' போராட்டத்தின் போது வாஜ்பாயியும் கைது செய்யப்பட்டு இருபத்து மூன்று நாட்கள் சிறைவாசம் அனுபவிக்க நேர்ந்தது.

இந்த சிறைவாச அனுபவத்தை வைத்துக்கொண்டு வாஜ்பாயியையும் ஒரு சுதந்திரப் போராட்ட வீரராகச் சித்தரிக்க பாரதிய ஜனதாக் கட்சியும் சில பத்திரிகைகளும் முயன்று வந்தன. வாஜ்பாயின் மறைமுக ஆதரவும் இதற்கு இருந்தது.

ஆனால் சென்னையிலிருந்து வெளிவரும் (Frontline) பத்திரிகை மிக மிக பழைய ஆவணங்களை எல்லாம் தேடிப்பிடித்து, வாஜ்பாய் சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பற்றவில்லை என்பதையும், சும்மா பார்த்துக் கொண்டு நின்றவர்கள் சிலரை பொலிசார் கைது செய்ததில் அதில் அகப்பட்டுக் கொண்டவர்களில் ஒருவர் தான் என்பதையும் சென்ற பெப்ரவரி 98 இதழில் வெளியிட்டு உண்மைகளை அம்பலமாக்கியது.

ஃபிரண்ட் லைன் 'வெளியிட்ட' ஆவணங்களுள் 1942ம் ஆண்டில் கைது செய்யப்பட்ட போது பொலிசாரிடம் வாஜ்பாய் அளித்த ஒப்புதல் வாக்கு மூலமும் அடக்கம்.

முதலில் இது குறித்து செய்தி வெளியிட முயன்றபோது வாஜ்பாயின் வழக்கறிஞர் 'ஃபிரண்ட்லைன்' பத்திரிகை உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட முயற்சிப்பதாக மிரட்டல் கடிதம் அனுப்பினார்.

ஆனால் 'ஃபிரண்ட்லைன்' தக்க சான்றுகளைக் காட்டிய போது ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ளது தனது கையெழுத்து என்பதை வாஜ்பாயி ஒப்புக் கொண்டதுடன் தனது வழக்கறிஞர் அனுப்பிய மிரட்டல் கடிதத்தை வாபஸ் பெறுவதாகவும் எழுத்து மூலம் கூறிவிட்டார்.

மிக மெலிதான பெரும்பான்மையுடன் ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ள வாஜ்பாயி, சமீபத்தில் இந்தியா நடத்திய அணுவெடிச் சோதனை மூலம் சாதாரண இந்திய குடிமக்கள் பலரின் அபிமானத்துக்கும் உரியவராக மாறிவிட்டார்.

அணுவெடிச் சோதனை மூலம் தனது பதவியை நிலை நிறுத்தவும் ஆட்சியைத் தொடரவும் திட்டம் போட்ட வாஜ்பாயிக்கு இப்போது 'ஜெயலலிதா என்ற குண்டு' புதிய பரிணாமம் காட்டி நிற்கிறது.

இந்த நெருக்கடியை வாஜ்பாய் எப்படிச் சமாளிக்கப் போகிறாய் என்பதைப் பொறுத்தே அவரது ஆட்சியின் எதிர்காலம் இருக்கிறது.

-சுகுமாரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பண்டிதமணி' 3 ஆம் பக்கத் தொடர்

அந்தக் காலத்தில் பண்டிதர்கள் புதிய இலக்கியங்களான சிறுகதை, நாவல் முதலியவற்றைத் தொட்டுப் பார்க்கவும் விரும்பாமலிருந்த போது, பண்டிதமணி அவர்கள் அவற்றையும், சுவைத்து நயம் கண்டார்கள்.

ஈழத்துப் புலவர்களின் அருமை பெருமைகளை எடுத்துக் காட்டிப் பேசுவதிலும், எழுதுவதிலும் அவருக்கு வெகு உற்சாகம்.

பண்டிதமணி ஒரு பிரமச்சாரியாகவே வாழ்ந்து தமிழ் வளர்த்த பெருமகன்.

பண்டிதமணியிடம் படித்தவர்களும் பழகியவர்களும் அவரைத் தமது இதய சிம்மாசனத்தில் வைத்துப்போற்றுகிறார்கள் என்றால் —

அதற்கு அவருடைய கல்வித் திறன் மட்டுமல்ல, அவருடைய மேலான குணநலன்களும் காரணங்களாகின்றன.

அடுத்த ஆண்டு — 1999ல் பண்டிதமணியின் நூறாவது பிறந்த தினம் வருகிறது.

மறக்காமலிருப்போமாக

— வரதர்

---

## பொது அறிவுப் போட்டி — விபரங்கள்

- தரப்பட்ட பத்து வினாக்களுக்கும் சரியான விடைகளைத் தனித் தாளில் எழுதி, அத்தாளிலேயே அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்படல் வேண்டும்.

- விடைகளை அனுப்பும் போது விடைத் தாளுடன் ஒரு ரூபா முத்திரை ஒன்றும் வைத்து அனுப்ப வேண்டும்.
- விடைகள் எமக்கு வந்து கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 25 - 07 - 98. அனுப்ப வேண்டிய முகவரி: பொது அறிவுப் போட்டி - 35, அறிவுக் களஞ்சியம், 226, காங்கேசன் துறைச் சாலை, யாழ்ப்பாணம்.

- முற்றிலும் சரியான விடை எழுதிய ஒருவருக்கு ரூபா 200/- பரிசாகக் கிடைக்கும். சரியான விடைகளைப் பலர் அனுப்பியிருந்தால், குலுக்கல் மூலம் நால்வரு பெயர்கள் தெரிவு செய்யப்பட்டு நால்வருக்கும் பரிசுத் தொகை சமமாகப் பகிர்ந்து அளிக்கப்படும்.

— ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதைபந்தாட்டம்

இலங்கை, இந்தியா, அவுஸ்திரேலியா முதலிய நாடுகளிலெல்லாம் கிரிக்கட் விளையாட்டுக்குத்தான் பெயரும் புகழும். அதிலும் இலங்கை வீரர்கள் ஒரு முறை உலக வெற்றிக் கிண்ணத்தை வென்றெடுத்ததோடு, இலங்கையில் கிரிக்கட் ரசிகர்களுக்கு ஒரே உற்சாகம்!

ஆனால், ஐரோப்பாவிலும் லத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா நாடுகளிலும் உதை பந்தாட்டம் தான் ராஜா! மகாராஜா!

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் உலக வெற்றிக் கிண்ண உதை பந்தாட்டப் போட்டி கடந்த ஜூன் 10 ம் திகதி பிரான்ஸ் நாட்டில் ஆரம்பமாகியிருக்கிறது. பிரான்ஸ் மட்டுமல்ல ஐரோப்பிய நாடுகள் எல்லாமே விழாக்கோலம் பூண்டிருக்கின்றன.

ஜூலை 12 ம் திகதி வரை நடைபெறும் இந்தப் போட்டியில் 64 நாடுகள் பங்கு கொள்கின்றன.

பிரான்ஸ் நாட்டின் பத்து நகரங்களிலுள்ள ஸ்ரேடியங்கள் புதுப்பிக்கப் பெற்று இந்தப் போட்டிகள் நடைபெறுகின்றன. இந்தப் போட்டியை தனது நாட்டில் நடத்துவதற்காக பத்தாயிரம் கோடி ரூபாவை பிரான்ஸ் செலவிடுகிறது!

போட்டி தொடங்கிய முதல் நாளே பாரிஸ் நகர வீதிகள் நடமாட்டமில்லாமல் வெறிச்சுப் போயினவாம். 'டிக்கட்' கிடைத்த அதிர்ஷ்டசாலிகள் விளையாட்டு ஸ்ரேடியத்துக்குப் போய்விட்டார்கள். மற்றவர்கள் தொலைக் காட்சிப் பெட்டிகளின் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டார்கள்— ஆட்டத்தைப் பார்ப்பதற்கு.

பிரான்சிலிருந்து மட்டுமல்ல உலகின் பல நாடுகளிலுமிருந்து, வசதி செல்வாக்குள்ளவர்கள் பிரான்சுக்குப் பறந்து போயிருக்கிறார்கள். உலகம் முழுவதும் 300 கோடிப் பேருக்கு மேல் உதை பந்தாட்ட நிகழ்ச்சிகளைத் தொலைக் காட்சியில் பார்க்கிறார்களாம்!

முதல் நாள் நடந்த ஆட்டத்தில் ஸ்கொத்லாந்தை பிரேஸில் வென்றுவிட்டது.

இதற்கு முன் நடைபெற்ற போட்டிகளில் பிரேஸில் நான்கு முறை உலகச் சாம்பியனாக வந்திருக்கிறது. இந்த முறையும் பிரேசிலையே பலரும் எதிர் பார்க்கிறார்கள்.

ரொமரியோ, ரொனால்டோ முதலிய புகழ் வாய்ந்த உதை பந்தாட்ட வீரர்கள் பிரேசில் அணியில் இருக்கிறார்கள். அரசியல் தலைவர்களையும் சினிமா நட்சத்திரங்களையும் விட இவர்களுக்கு உலகப் புகழ் அதிகம்.

ரொனால்டோ என்ற வீரர் தமது கால்களைக் காப்புறுதி செய்திருக்கிறார். எவ்வளவு தொகைக்குத் தெரியுமா? மயங்கி விடாதீர்கள். நூறு கோடி ரூபா! நூறு லட்சமல்ல! நூறு கோடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெச்சத்தகுந்த
அச்சு வேலைகள்

O குறைந்த செலவில்
O கூடிய கவனிப்புடன்

ஆனந்தா
அச்சகம்
யாழ்ப்பாணம்

தொ. பே. 2820

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ மோட்டார் சைக்கிள்கள்
★ மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள்
★ வாகனங்களுக்குத் தேவையான
சகல விதமான பட்டரிகள்
மற்றும் அசிட் போன்றவைகள்
நல்ல தரத்திலும்
○ நியாயமான விலைகளிலும் கிடைக்கும்

கால் நடைகளுக்குரிய சகல வித
தீவனங்களையும் மொத்தமாக
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

# காந்தன் ரேட் சென்ரர்

802/4, பலாலி வீதி திருநெல்வேலி,

அறிவுக் களஞ்சியம் - 35. யாழ்ப்பாணம், காங்கேசன்துறைச்சாலை,
ஆனந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்டவர்: இ. ச. வரதராசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org